★ ★

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (25-5-66) இதழ் 107

பராபவ வைகாசி 12 ஸபர் 4 புதன்கிழமை

## விற்பனவு இலாகாக்கடை பெரியகடைக்கு மாற்றப்படும்

யாழ்ப்பாணம், புதன்

சுண்டிக்குளியிலிருக்கும் அரசாங்க விற்பனவு நிலையம் விரைவில் பெரிய கடைக்கு மாற்றப்பட விருக்கிறது.

பொதுமக்களின் சௌகரியத்தை முன்னிட்டே இந்த நிலையம் இங்கு மாற்றப்படவிருக்கிறது. இப்போதிருக்கும் இடத்திற்கு யாழ்ப்பாண நகரிலுள்ள பொதுமக்கள் செல்வதில் சிரமமேற்படுவதாகவும் இதனால் நிலையம் அதிகமானோருக்குச் சேவை செய்யமுடியாதிருப்பதாகவும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மார்க்கெட்டிலுள்ளவர்கள் பொருள்களின் விலைகளை தாம் நினைத்தபடி உயர்த்தி விற்பனை செய்வது இந்த நிலையம் இங்கு வருவதால் தடை செய்யப்படுமென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையம் யாழ்ப்பாணம் மார்க்கட்டுக்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டுமென யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும், யாழ்ப்பாணம் மேயர் திரு. அல்பிரட் துரையப்பாவும் கோரியிருந்தனர்.

# தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதில் வெற்றி

## சேக்கிழார் விழாவுக்கு ஸ்ரீ காஞ்சி ஜகத்குரு ஆசி

இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகும் சேக்கிழார் விழாவுக்கு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் அருளிய ஆசிச்செய்தி

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ் நாட்களை ஏதோ ஒரு தொண்டு செய்வதன் மூலம் ஈசுவரனிடம் அர்ப்பணம் செய்ய வேண்டும் அப்படிச் செய்த அடியார்களின் பெருமையெல்லாம் ஒருங்கே திரட்டி நாமும் அந்த வழியில் சிறிதளவாவது செல்வதற்கு வழிவகுத்துக் கொடுத்த பெருமை சேக்கிழாரைச் சேர்ந்தது. இப் பெருமானின் வழிபாடு நல்ல முறையில் நடைபெற ஈசனை இறைஞ்சுகின்றோம்.

மதுரை ஆதீனத்துத் திருவருள் தவயோக ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளின், ஆசிச் செய்தி:

வைகாசிப் பூசத்தன்றும் அடுத்தநாளும் சேக்கிழார் குருபூஜையும் விழாவும் நடாத்தத் திருவருள் கூட்டியிருப்பதையறிந்து மகிழ்கின்றோம். விழா யாதொரு விக்கினமுமின்றிச் சிறப்பாக நடைபெறவும், அதில் பங்கு கொள்ளுகின்ற பக்த கோடிகள் அனைவரும் எல்லா நலன்களும் பெற்றுத் திகழவும், திருவருள் பாலிக்குமாறு எல்லாம் வல்ல அங்கயற்கண்ணி பங்கனும் ஆலவாய் அண்ணலைப் பிரார்த்தித்தி ஆசீர்வதிக்கின்றோம்.''

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை வாழ்த்து.

வீடுபெறநில் என்பது ஔவை அருளிய வேத வாக்குக்களுள் ஒன்று மனிதனே நீ உனக்கமைந்த எத்தொழிலையுஞ் செய்து கொண்டு எங்கே நின்றாலும் நில்; நிற்கும்போது வீடு பெறநில் என்கிறுள் அந்தப் பிராட்டி.

வீடு என்பதன் பொருள் விடுதல். வஞ்சகம், பொறாமை, பொய், கோபம். காமம், அவா என்றிவை முதலியவைகளும், இவற்றிற் கடிப்படையாய அறியாமையும் நம்மைப்பற்றியுள்ள நோய்களாம், அவற்றை மெல்ல மெல்ல விட்டுத் தொலைக்க முயல்வதே வீடு பெற நிற்றலாம்.

பெரிய புராணத்திற் சொல்லப் பட்ட அறுபத்து மூன்று தனியடியார்களும் பல வேறுபட்ட தொழில்களைச் செய்து கொண்டு பல

(8-ம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தின் சாதனை பற்றி யு. என். பி. செயற்குழு பாராட்டு

### ''உறவுகளைப் பலப்படுத்துவோம்''

—டட்லி

கொழும்பு, செவ்வாய்

நாட்டில் ஒருமைப்பாட்டையும் மக்கள் மத்தியில் சௌஜன்யத்தையும் ஏற்படுத்துவதில் அரசாங்கம் பெரும் வெற்றி கண்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு பாராட்டியுள்ளது.

நேற்று கொழும்பில் கூடிய யு என் பி செயற்குழு தேசிய அரசாங்கத்தின் சாதனைகள் பற்றி பொதுவாக ஆராய்ந்தது. கட்சியின் தலைவரும் பிரதம மந்திரியுமான திரு. டட்லி சேனநாயகா செயற்குழுவில் உரை நிகழ்த்துகையில் நாட்டில் உள்ள இரு பெரும் சமூகங்களுக்கிடையில் எப்போதையும் விட இப்போது நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருப்பதாகவும், இந்த இன உறவுகள் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். அவருடைய முழு பேச்சிலும் நாட்டின் அமைதியும் ஒருமைப்பாடுமே பிரதான இடம் பெற்றது.

பிரதமர் தொடர்ந்து பேசியபோது நாட்டின் பொருளாதார நெருக்கடிகள் தீர்வதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டினர். தமது சமீபத்

(8-ம் பக்கம் பார்க்க)

## சர்வதேச துப்பறியும் அதிகாரிகள் வந்துள்ளனர்

### 35 ஆயிரம் பவுண் மோசடிபற்றி ஆராய்வர்

கொழும்பு, புதன்

இலங்கை உடவலவ முன்னேற்றத்திட்டத்தில் நடைபெற்றுள்ளதாகக் கருதப்படும் ஊழல்கள் சம்பந்தமாக துப்பறிவதற்காக சர்வதேச துப்பறியும் 'இண்டர்போல்' ஸ்தாபனத்தின் உதவி கோரப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது. இந்த ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் நேற்று பாராளுமன்றக்கட்டிடத்தில் காணப்பட்டனர். அவர்கள் மத்தியில் சில முக்கியஸ்தர்களின் பெயர்கள் மேற்படி ஊழல சம்பந்தமாக அடிபட்டதாக அறியப்படுகின்றது

பிரஸ்தாப முன்னேற்றத் திட்டத்தில் அரசாங்க 'கண்டிராக்ட்' கொடுக்கப்படும்

(8-ம் பக்கம் பார்க்க)

## ''தொழிலாளர் குறைகளை நிவர்த்திக்கத்தயங்கேன்''

— தொழில் மந்திரி

யாழ்ப்பாணம், புதன்

'கடந்த முறை யாழ்ப்பாணம் வந்தபொழுது இங்கு வீடமைப்புத்திட்டம் ஆரம்பிப்பேன் என வாக்குறுதியளித்தேன். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு இன்று மீண்டும் வந்திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்'.

யாழ். மக்கள் துறைமுகத் தொழிலாளர் பொதுச் சேவையாளர் கூட்டுறவுசங்க காரியாலயத்தில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டத்தில் தொழில் வீடமைப்பு மந்திரி ஜனப் முகமத் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்

காரியாலயத்தை மந்திரி திறந்துவைத்தபின், அங்குள்ள பிரதமர் டட்லியின் படத்தை மந்திரி திரை நீக்கம் செய்துவைத்தார். சங்கத்தின் முக்கிய தேவைகளை திரு. சி. செல்லத்துரை கவிதை வடிவில் எடுத்துக் கூறினர். உணவு உதவி கட்டுப்பாட்டதிகாரி திரு. சிவப்பிரகாசம், தொழிலாளர் ஒற்றுமை என்ற விஷயம் பற்றி பேசினர்.

திரு. ஜோசப் அன்ரனி பேசும்போது, தொழிலாளர்களுக்கு வேலை பெற்றுக் கொடுத்ததற்கு பாராட்டினர்.

மந்திரி முகமத் பேசும் போது கூறியதாவது:

உண்மையான அங்கத்தவர்கள் இல்லாத காரணத்தால் சில பகுதிகளில் தொழிற்சங்கங்கள் முன்னேறுவதில்லை. ஒழுங்கானவர்களைத் தெரிவு செய்தால் தொழிற்சங்கம் வளர்ச்சியடைய முடியும். இந்த சங்கம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடமாகின்றபோதிலும், அதிக முன்னேற்றமடைந்துள்ளது. அதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன் இந்நாடு முன்னேறவேண்டுமானல் தொழிலாளர்கள் தங்கள் வேலைகளை ஒழுங்காகச் செய்யவேண்டும் என்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளை நான் கவனிப்பேன்.

யாழ்ப்பாண எம். பி. பேசும்போது, தொழிலாளர்களுக்கு வேலை பெற்றுக் கொடுத்ததற்காக, அரசாங்க அதிபருக்கும், தொழில் கமிஷனருக்கும், உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரிக்கும் நன்றி தெரிவித்தார்.

## ஆங்கில வகுப்புக்களை நிறுத்தவேண்டாம்

### 12 ஸ்தாபனங்கள் அரசாங்கத்துக்கு சமர்ப்பித்துள்ள மகஜர்

கொழும்பு, செவ்வாய்

அடுத்த ஆண்டிலிருந்து பள்ளிக்கூடங்களில் ஆங்கில வகுப்புக்களுக்கு பிள்ளைகள் சேர்ப்பதை நிறுத்துவதற்கு கல்வி மசோதாவில் வகைசெய்திருப்பதை ரத்துசெய்யும்படி சிறுபான்மை மக்களின் 12 சங்கங்கள் அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறன்றன.

இந்த 12 சங்கங்களும் ஒன்ருகச் சேர்ந்து மகஜர் ஒன்றை அரசாங்கத்திடம் நேற்று சமர்ப்பித்தன

1967-ம் ஆண்டு ஜனவரி முதல் பள்ளிக்கூடங்களில் ஆங்கில வகுப்புகளுக்குப் புதிதாகப் பிள்ளைகளைச் சேர்ப்பதை நிறுத்திவிடுவது என்றும் இதுவரை ஆங்கில வகுப்புக்களில் தம்பிள்ளைகளைப் படிப்பிப்பதற்கு அனுமதித்துவந்தவர்கள் இனிமேல் புதிதாகப் பிள்ளைகளை பள்ளிக்கூடங்களில் சேர்க்கும் போது சிங்கள அல்லது தமிழ் வகுப்புக்களில் சேர்க்கவேண்டுமென்றும் கல்வி மந்திரியின் புதிய கல்வி மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மசோதாவின் இந்த அம்சத்தை வன்மையாகக் கண்டித்துள்ள மேற்படி 12 ஸ்தாபனங்களும் ஆங்கிலத்தைத் தம் வீட்டுமொழிகளாகப் பாவித்துவரும் மக்களின் குழந்தைகளைத் திடீரென சிங்களம் அல்லது தமிழைப் படிப்பிக்கும்படி வற்புறுத்துவது இந்த மக்களின் ஜீவாதார உரிமைகளைப் பறிப்பதாகுமென்றும் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதற்கு ... ஆங்கில ... பாஸ

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

அச்சுக்கோர்ப்பதில்
பயிற்சி பெறுபவர்கள்

தினசரிப்பத்திரிகை ஒன்றுக்கு அச்சுக்கோர்ப்பதில் (கொம்போஸிங்) பயிற்சி பெறுவதற்குப் படித்த இளைஞர்கள் உடனடியாகத் தேவை. தமிழ்மொழியில் போதுமான அறிவு பெற்றிருப்பது அவசியம். ஆங்கிலத்தில் அறிவு பெற்றிருப்பது மேலதிக தராதரமாகக் கணிக்கப்படும், விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கும் 25 வயதுக்குட்பட்டவர்களாகவும் நல்ல உடலுறுதியுடையவர்களாகவும் இருக்கவேண்டும். விளம்பர இலக்கம்: 383 'ஈழநாடு' மேற்பார்த்து த. பெ. 49, யாழ்ப்பாணம். என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 383

விற்பனையாளர்கள்

விற்பனையாளர்கள் தேவை. நேரில் வரவும். விஞயகம் இன்டஸ்றீஸ், (வெலிங்டன் சந்தி) யாழ்ப்பாணம். 389

மனேஜர், உதவி மனேஜர், ரெக்னீசியன்ஸ், மெக்கானிக்ஸ்

மனேஜர், உதவிமனேஜர், ரெக்னீசியன்ஸ் அனுபவமுள்ள டிராக்டர் மெக்கானிக்ஸ் தேவை. விபரங்கட்டு அசோகா என்ஜினியரிங் கோப்பரேஷன், உயிலங்குளம், 375

## விற்பனைக்கு

மோட்டர்.....

நல்ல நிலைமையிலுள்ள 7-ம் நம்பர் இந்தியன் ஹல்லரும்; 10 அங்குல இங்கிலீஸ் கிரைண்டரும்; 12 அங்குல இங்கிலீஸ் கிரைண்டரும்; 7 1/2 ஹோஸ் பவர் மோட்டரும்; ஸ்ராட்டரும்; பெல்டுகளும் விற்பனைக்குண்டு. த. இராசரத்தினம், 72, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 368

வீடு

பெரிய விசாலமான அறைகளுடைய வீடு விற்பனைக்கு உண்டு. 55, பெரிய தெரு யாழ்ப்பாணம் விபரங்கட்கு திருமதி ஆர். சம்பந்தநாதன், 47, ரெதினிங்ஸ்கூல் ரோட் கொழும்பு-5 என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். 371

கார்

நல்ல நிலைமையிலுள்ளதும் புதிய பற்றறி, ரயர் உடைய EN கில்மன், ஓ. எச். வி கார் விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம். 'ஈஸ்வரபதி' சேர்ச் லேன், உடுவில். 392

## கல்வி

கலை, விஞ்ஞானம்

கலை / விஞ்ஞானம் ஆகியவற்றிற்கு அனுபவமுள்ள (Hons) செய்த பட்டதாரிகளாலும் 3 மாத, 6 மாத, 1 வருட தமிழ், ஆங்கில சுருக்கெழுத்துக்கும் மற்றும் வர்த்தகப் பாடங்களுக்கும், ஆசிரியகலாசாலைப் பிரவேச பரீட்சைக்கான பாடங்களுக்கும் 44 வருட ஆசிரிய அனுபவமுள்ளவரால் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. இத்துடன் ஆங்கிலத்திற்கும் தையலுக்கும், சிங்களத்துக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. விண்ணப்பிக்கவும்: வர்த்தகக்கல்லூரி, பருத்தித்துறை/ வதிரி, கரவெட்டி. (393)


நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
என்.டி. ராமராவ் - கே. மாலதி
நடித்த
பாதாள பைரவி

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 6-30, 10-00
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
தெய்வத்தாய்

REGAL--JAFFNA
NOW SHOWING!
URSULA ANDRESS
in
H. Rider Haggard's
SHE
(Cinemascope - Tecnicolor)

இப்பொழுது
திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை) ஸ்ரீகிருஷ்ணா (திருக்கோணமலை)
விஜிதா (ஹட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) மொடோர்ன் (பதுளை)
தீவொளி (நுவெரேலியா)

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமுவிஸ்

தெய்வத்தாய்

இசை:
விஸ்வநாதன்—ராமமூர்த்தி


## இப்படியும் நடக்கிறது

உடுப்பிட்டி, செவ்.

கட்டைவேலி கிராமசபை எல்லைக்குள் இருக்கும் வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாக உள்ள பெருந்தெரு பல காலமாகப் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலையில் இருந்துவருகின்றது. இதைப்பற்றி அவ்வூரைச் சேர்ந்த மக்கள் பல தடவைகள் கிராமசபைத் தலைவருக்கும், வட்டாரப்பிரதிநிதிக்கும் மகஜர்கள் மூலமும், நேரடியாகவும் முறையிட்டும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கத் தவறியமையால் வதிரி பூவற்கரை ஆலயநிர்வாகிகளின் நன்முயற்சியினால் சுமார் 200 யார் தூரத்திற்கு ரோட்டுப் போடப்படுகிறது. இதற்குச் சிரமதானம் மூலம் இவ்வூர் இளைஞர்கள் ஒத்தாசை புரிகின்றனர்.

## நேரு நினைவு விழா

உடுப்பிட்டி, செவ்வாய்

கரணவாய் தெற்கு கலா படிப்பக மன்றத்தினரின் நேரு நினைவு தினவிழா 26-ந் திகதி வியாழக்கிழமை திரு. ஐ. சிவகுரு தலைமையில் நடைபெறவிருக்கிறது. பிற்பகல் 2 மணிக்கு விளையாட்டுப் போட்டியும் மாலை 4 மணிக்கு நேருநினைவு தினக் கூட்டமும் நடைபெறும்.

பொதுக்கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், திரு. க. ஜெயக்கொடி, திரு. எம். சிவபாதசுந்தரம், திரு. கே. ரி. இராசசிங்கம், பண்டிதர் இ. க. முருகேசு, நெல்லை க. பேரன், திரு. க. பரஞ்சோதி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

பொதுக்கூட்டத்திற்கு உடுப்பிட்டி கிராமசபைத் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் தலைமை வகிப்பார்.

## சாவகச்சேரியில் புதிய கழகம்

சாவகச்சேரி, செவ்வாய்

சாவகச்சேரி மத்திய விளையாட்டு கழகத்திலிருந்து வெளியேறிய சில அங்கத்தவர்கள் 'சன்றைஸ்' விளையாட்டு கழகம் என்ற புதிய விளையாட்டுகழகத்தை ஆரம்பித்துள்ளனர்.

'சன்றைஸ்' விளையாட்டு கழகத்தின் தலைவராக திரு. எஸ் சின்னத்துரையும் காரியதரிசியாக, திரு. ஏ. ஜோர்ச்சும், தனதிகாரியாக திரு. பி கே. குமாரசாமியும் கோஷ்டித்தலைவராக திரு. எஸ். பி. கணபதிப்பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இப்புதிய கழகத்தில் 25 அங்கத்தவர்கள் சேர்ந்துள்ளார்கள்.

## நெசவுநிலைய அடிக்கல் நாட்டுவிழா

யாழ்ப்பாணம், புதன்

மாதகல் சென். தோமஸ் தேவாலய வளவில் புதிய நெசவுநிலையமொன்றுக்கான அடிக்கல்லை கட்டளைக்குரவர் வண. ஜே. பீ. தேவராஜன் நாட்டிவைத்தார்.

யுவதிகள் கைத்தொழில்களில் ஈடுபட்டால் வேலையில்லாத்திண்டாட்டம் நீங்கி விடுமென்றும் நாடு செழிப்பாகுமென்றும் வண. தேவராஜன் குறிப்பிட்டார்.

மட்டக்குளிஆஸ்பத்திரி

## 'பார்வையிடும் நேரத்தைமாற்றுக!'

கண்டி, செவ்வாய்

மட்டக்குளி ஆஸ்பத்திரியில் நோயாளர்களைப் பார்வையிடும் நேரத்தை மாலை 4 மணி 6 மணிக்கு மாற்றும் [illegible] எம். பி. திரு. எஸ். தொண்டமான் எழுதியுள்ள கடித

# விளம்பரம்

## அறிவித்தல்

கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

கலண்டர், டயறி உற்பத்தியாளருக்கு

1967-ம் ஆண்டிற்குகலண்டர், டயறி உற்பத்தி செய்வதற்கு தேவைப்படும் கடதாசியின் அளவை இக்கந்தோரில் கிடைக்கக்கூடிய படிவத்தில் நிரப்பி அனுப்பும்படி, எல்லா கலண்டர், டயறி உற்பத்தியாளரும் வேண்டப்படுகின்றனர்.

விண்ணப்பங்களாவது, 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ, கிடைக்கக் கூடியதாக அனுப்பவேண்டும்.

பொது முகாமையாளர்
கிழக்குப் பகுதிக் கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

70, யோர்க் வீதி,
கொழும்பு-1
22-5-1966. 430

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

1. எமிலி அற்புதமலர் கஸ்பசன்,
2. புளோறன்ஸ் அற்புதமலர் கஸ்பசன்

வழக்காளிகள்

இருவரும் உடுப்பிட்டி

எதிராக

இல. 8994.

1. தம்பிராசா மகள் மேரி நேசம்மா,
2. சாமுவல் கென்றி இராசரத்தினம் இருவரும் ஷை

எதிரிகளுக்கு

வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக், வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டி சோயில் பற்று, உடுப்பிட்டி, கொட்டை செம்பாடு என்னுமாதனம் நிலப்பரப்பு 14 1/4 ஷை நிலப் பரப்பு 14 1/4, வீடு 1, தோட்டம் 1, V. சிவரத்தினம் சேவையரால் விந்தாரிக்கப்பட்ட படம் இல: 2485, திகதி 20-10-1965, 1-ம், 2-ம், 3-ம் துண்டுகளாகப் பங்கு பிரிக்கப்பட்டும், எல்லாம் சேர்ந்து நிலப்பரப்பு 28 1/2 வீடு 1, தோட்டம் 1, எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு ரோட்டு, மேற்கு சின்னத்தம்பி கார்த்திகேசும் மறுபேருடைய ஆதனம் தெற்கு: கவுத்தார் திரவியரத்தினம் கஸ்பசனின் ஆதனம் இதில் முழுவதும்.

என்னும் ஆதனம் என்னும் ஆதனங்களை 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக் கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1966-ம் ஸ்ரீ வைகாசி மீ 23 திகதி 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப் பட்டிருக்கிறார்கள். இதில் உரிமை உள்ளவர்களும் சமுகமளிக்கலாம்.

கோட்டாரின் கட்டளைப்படி

மூ. ஸ்ரீ பத்மநாதன்

1966-ம் ஸ்ரீ வைகாசி மீ 7 வ. 438

மொன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பகுதியிலுள்ள மக்களுக்கு போக்குவரத்து வசதியில்லாத காரணத்தினால் இம்மாற்றத்தை ஏற்படுத்தும்படி கேட்டுக்கொள்வதாக அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணக் கல்லூரி பல்கலைக்கழகப் பகுதி

கல்விப் பொதுப்பத்திர வகுப்பு

கலை விஞ்ஞான வகுப்புகள் 1967

மேற்படி வகுப்புக்கு, யூன் முதற்பகுதியில் மாணவர் சேர்த்துக்கொள்ளப்படுவர். மனுச்செய்ய விரும்புவோர், விண்ணப்பப்பத்திரம் என்பவற்றைப் பெறுவதற்கு, தபால் தலையொட்டி நீண்ட காகிதக்கூடுகளை தங்கள் விலாசமிட்டு அனுப்பவேண்டும்.

31-5-66-ல் மனுச் செய்வோருக்குரிய தேதி முடிவடைகின்றது.

பதிவாளர்

வட்டுக்கோட்டை.
23-5-66. 436

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோர்ட்டில்

S. கணபதிப்பிள்ளை சின்னத்துரை, அல்வாய் தெற்கு

வழக்காளி

இல. 9004 எதிராக

1, கார்த்திகேசு பொன்னையாவும், மனைவி.
2. காமாட்சி அம்மா.
3. கதிர்காமத்தம்பி ஞானபாஸ்கரன்.
4. கணபதிப்பிள்ளை தியாகராசா.
5. கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை.
6. கணபதிப்பிள்ளை தங்கத்துரை.
7. திருநாவுக்கரசு செல்வராசா.
8. திருநாவுக்கரசு மகள் பத்மாவதி.
9. கணபதிப்பிள்ளை சுப்பிரமணியமும் மனைவி,
10. பரமேஸ்வரி.
11. திருநாவுக்கரசு கணேசலிங்கம் எல்லோரும் ஷை

எதிரிகள்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக், வடமராட்சிப்பகுதி, கட்டைவேலிக் கோவில்பற்று, மலவராயர் குறிச்சி, அல்வாய், தெற்குக் கண்டாவத்தை என்னுமாதனம் நி. ப. 24, பனைகள், வேம்புகள், வீடுகள் எல்லை கிழக்கு முருகேசு பெண் சின்னத்தங்கமும் மறுபேருடைய ஆதனமும், வடக்கு தணிகாசலம்பெண் குணேஸ்வரியின் ஆதனம், மேற்கு கணபதிப்பிள்ளை பொன்னுத்துரையும் மறுபேருடைய ஆதனம், தெற்கு சின்னத்துரை நடராசாவும் மறுபேருடைய ஆதனமும் ஒழுங்கையும் இதில் முழுவதும், இவ்வாதனத்துக்கூடாகப் போகும் ரோட்டு நிலத்தைக் கழித்தும்.

என்னும் தெற்குக் கண்டாவத்தை ஆதனம் என்னும் ஆதனங்களை 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோர்ட்டில் மேற்படி இலக்கத்தின் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலுமக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோர்ட்டில் 1966-ம் ஸ்ரீ வைகாசி மீ 21 திகதி 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள். இக்காணியில் இன்னும் உரிமை உள்ளவர்களும் சமுகம் அளிக்கலாம்.

கோட்டாரின் கட்டளைப்படி

மூ ஸ்ரீபத்மநாதன்
சத்கிடுத்தாருக்காக
1966-ம் ஸ்ரீ வைகாசி மீ 7வ.
437


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உகண்டாவில் புதிய அரசியல் நெருக்கடி உதயம்

## மன்னர் கபாகாவுக்கும் அதிபர் ஒபடேக்கும் தகராறு

### சமஷ்டியிலிருந்துவெளியேற இறுதிச்சரிக்கை

கம்பாலா, மே 24

உகண்டாவில் புதிய அரசியல் நெருக்கடி ஒன்று தோன்றியிருக்கிறது. சமஷ்டியின் பெரிய மாகாணமான உகண்டாவில் அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

வருகிற 30-ந் திகதிக்குப் பின் உகண்டாவின் சமஷ்டி ஆட்சியிலிருந்து உகண்டா விலகிக் கொள்ள வேண்டும் என உகண்டா மன்னர் கபாகா விடுத்த இறுதி எச்சரிக்கையைத் தொடர்ந்து அதிபர் மில்டன் ஒபடே இந்த நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார்.

ஐ.நா.வை இவ்விஷயத்தில் தலையீடு செய்யுமாறும் கபாகா யுதாண்டுக்கு விண்ணப்பித்திருக்கிறார்.

ஆனால் ஐ. நா.வின் தலையீடு ஒரு கலக நடவடிக்கையாக இருக்கும் என அதிபர் ஒபட்டே அறிவித்தார். புகண்டாவில் பல அரசியல் வாதிகள் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

1962-ம் ஆண்டு சாஸனப்படி புகண்டாவின் கபாகா, சமஷ்டியின் ஜனாதிபதியுமாவார்.

உகண்டா வெளியேற வேண்டும் என்ற முடிவு புகண்டா பார்லிமெண்டில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்டதாக மன்னர் அறிவித்தார்.

உகண்டா அதிபர் ஒபடே 1962-ம் ஆண்டு அரசியல் சாஸனத்தை ரத்துச்செய்து புதிய சாஸனத்தைப் பிரகடனம் செய்தார். உகண்டா பார்லிமெண்டிலிருந்து 6 புகண்டா எம். பி.க்கள் வெளியேற்றப் பட்டார்கள். இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து கபாகா கிளர்ச்சி செய்கிறார்.

## பலாத்காரத்தை உபயோகிக்கும் தீர்மானம் தோற்றது

### பாதுகாப்புசபையில் ரொடீஷிய வாக்கெடுப்பு

நியுயோர்க், மே 24

ரொடீஷியாவில் ஸ்மித் ஆட்சியைப் பாலாத்காரத்தை உபயோகித்து பிரிட்டன் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என ஆபிரிக்க நாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தை ஐ. நா. பாதுகாப்புசபை நிராகரித்துவிட்டது.

தரை, கடல், ஆகாயம் ஆகிய மூன்று வழிகளாலும் அந்நாட்டின்மீது பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும் என்ற தீர்மானமும் நிராகரிக்கப்பட்டது.

மாலி, உகண்டா, நைஜீரியா ஆகிய நாடுகள் கொண்டுவந்த இத்தீர்மானம் சாதகமாக 6 வாக்குகளையும் பாதகமாக 1 வாக்கையும் பெற்றது. 8 நாடுகள் வாக்களிக்கவில்லை.

9 நாடுகள் வாக்களித்தால் மட்டுமே தீர்மானம்செல்லுபடியாகும்.

மாலி, உகண்டா, நைஜீரியா, ரஷ்யா, பல்கேரியா, ஜோர்டான் ஆகியன ஆதரித்த நாடுகளாகும்.

நியூஸிலந்து எதிர்த்து வாக்களித்தது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜப்பான், உருகுவே, அர்ஜண்டீனா, ஹாலந்து, போர்மோஸா ஆகிய நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

## மைசூர் - மகாராஷ்டிரா - கேரள எல்லைக்கு ஒருவர் கமிஷன்

### காங்கிரஸ் காரியக்கமிட்டி முடிவு

பம்பாய், மே 24

மைசூர் — மகாராஷ்டிரா, மைசூர் — கேரளா ராஜ்யங்களின் எல்லையை நிர்ணயம் செய்வது குறித்து ஒருறுப்பு கமிஷனை நிறுவுவதென காங்கிரஸ் காரியக்கமிட்டி முடிவுசெய்திருக்கிறது.

இதற்கிடையில் அகில பாரத காங்கிரஸ் கமிட்டியின் 3 நாள் கூட்டம் நேற்று பம்பாயில் முடிவடைந்தது. காங்கிரஸ் தலைவர் காமராஜர் வேறோர் நிகழ்ச்சியிலிருந்துவர தாமதமாகிவிட்டதால், காரியக்கமிட்டிக் கூட்டம் 45 நிமிஷம் தாமதித்து நடைபெற்றது.

ஒற்றையர் கமிஷனின் பெயர் பின்பு அறிவிக்கப்படும் என திரு. காமராஜர் கூறினார். இம் முடிவு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார். காரியக்கமிட்டியின் முடிவு உண்ணாவிரதமிருக்கும் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டது.

ஒற்றையர் கமிஷன், தகராறு உள்ளபகுதிகள்பற்றி மட்டுமே கவனிக்கவேண்டும் என மைசூர் விரும்புவதாய் முதல் மந்திரி திரு. நிஜலிங்கப்பா கூறினார். பெல்காம் ஜில்லா, நிபானி ஆகிய இடங்கள் மீதான உரிமையை மகாராஷ்டிரம் கைவிடவேண்டும் என்றும், சொல்கனி மகாராஷ்டிர மொழியிலிருந்து பிறந்தது என்ற கூற்றையும் மகாராஷ்டிரம் கைவிடவேண்டும் என்றும் அவர் கூறினார்.

### பஞ்சாப் கமிஷன்

இதற்கிடையில் மூவரடங்கிய பஞ்சாப் எல்லைக் கமிஷன் தனது கூட்டத்தை முடித்துக்கொண்டுவிட்டது. இம்மாத இறுதிக்குள் அது தனது அறிக்கையை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கும் எனக் கூறப்படுகிறது.

நீதிபதி திரு. ஜே...

...ஜாவின் தலைமையிலான இந்தக் கமிஷனுக்கு 800 மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டன. 2000 பேர் நேரடி [illegible]

## இந்திய ஹாக்கி கோஷ்டி

ஹாம்பர்க், மே 24

ஹாம்பர்க்கில் நடைபெற்ற சர்வதேசத் தெரிவுக்கோஷ்டி ஒன்றை இந்திய ஹாக்கிக் கோஷ்டி 3-0 கோல்களால் தோற்கடித்தது. இங்கு நடைபெற்ற சர்வதேச ஹாக்கி இறுதிப் போட்டியில் வெற்றிபெற்ற இக்கோஷ்டி இப்போது ஐரோப்பிய சுற்றுப்பிரயாணத்தை ஆரம்பித்துள்ளது.

## அரசாங்கம் தலையீடு

லண்டன், மே 24

பிரிட்டனில் நடைபெற்று வரும் மாலுமிகள் வேலைநிறுத்தத்தில் அரசாங்கம் தலையிட்டிருக்கிறது.

துறைமுக, கப்பல்சேவை கட்டுப்பாடு சம்பந்தமாக அவசரகாலச்சட்டம் ஒன்று பிரகடனப் படுத்தப்பட்டது ஆனால் அவசியமேற்பட்டால் மட்டுமே இச்சட்டம் உபயோகிக்கப்படுமெனத் திரு. வில்ஸன் அறிவித்தார்.

வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரக் கப்பல் முதலாளிகள், மாலுமிகள் யூனியன் ஆகிய இரு பகுதிப் பிரதிநிதிகளுடனும் பிரிட்டிஷ் தொழில்மந்திரி நடத்திய பேச்சுக்கள் வெற்றியளிக்கவில்லை.

## வியட்னாம்

சைகோன், மே 24

நேற்றுக் கைதுசெய்யப்பட்ட டானாங் மேயர் தலைநகர்சைகோனுக்குகொண்டுவரப்பட்டிருக்கிறார்.

நேற்று முக்கிய எதிர்ப்புத்தளம் வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து டானாங் நகரின் 90 சதவிகிதப்பகுதி அரசாங்கத் துருப்புக்கள் வசம் வந்துவிட்டன

இன்று டானாங் நிலைமை பற்றியும், உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வருவது பற்றியும் ஆலோசிக்க, பிரதமர் கீ தேசிய மகாநாடு ஒன்றைக் கூட்டியிருக்கிறார். ஆனால் பௌத்தர்கள் இதை பகிஷ்கரித்து வருகின்றனர்.

## இலங்கை மாணவர் திருடப்பட்டார்

மணிலா, மே 24

கொழும்பைச் சேர்ந்த வி. கே. நாணயக்காரா என்னும் 25 வயது மாணவரின் பெட்டி இங்குள்ள டாக்ஸி சாரதியால் திருடப்பட்டது.

இலங்கை மாணவரும், நியுசிலந்து, சைகோன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மற்றும் இரு மாணவர்களும் இந்த டாக்ஸியில் வந்தனர். அவர்கள் மூவரும் மாணவர் கழக வாசலில் இறங்கியபோது டாக்ஸி 750 பவுண் பெறுமதியான இந்த மாணவர்களின் பெட்டிகளை அடித்துச்சென்றுவிட்டது. பிடிஸி

## கோவா தேர்தல்

பம்பாய், மே 24

வருகிற பொதுத்தேர்தலுடன் சேர்ந்து கோவா தேர்தலும் நடத்தப்படுமெனப் பிரதமர் ஸ்ரீமதி காந்தி அறிவித்திருக்கிறார்.

## "கிளே, என்னுடன் சவாலுக்கு வருகிறீரா?"

நியூயோர்க், மே 24

உலக இலேசுரக அதிபார சாம்பியன் (லைட்ஹெவி வெயிட்) ஜோஸ் டோரஸ், சாம்பியன் கிளேக்கு சவால் விடுத்திருக்கிறார்.

30 வயதான, போர்ட்டோ ரீகோ நாட்டைச் சேர்ந்த டோரஸ், லண்டனில் நடைபெற்ற கிளே-கூப்பர் குத்துச்சண்டையை டெலிவிஷனில் பார்வையிட்டார்.

"முகம்மதலியுடன் அதிபார சாம்பியன்பட்டத்துக்காகச் சண்டையிட சரியான ஆள் நான்தான். என்னைப் போன்ற கம்பீரமான வீரனுடன் அவர் சண்டையிட வேண்டும்" என டோரஸ் கூறினார்.

"கிளே அடுத்து ஜெர்மனியைச் சேர்ந்த கார்ல் ஹில்டன் பார்க்குடன் சண்டையிடக்கூடும். அமெரிக்காவைச் சேர்ந்த ரோஜர் ரௌஸுடன் அடுத்த மூன்றுமாதங்களில் பொருத கிளே நினைக்கிறார். என்னையும் சேர்த்துக்கொள்ளட்டும்" என்றார் டோரஸ்.

இந்த அறிக்கைக்குப்பின் அவர் மெயின் தோர்ண்டன் என்ற வீரருடன் பொருதி வெற்றிபெற்றார். தோர்ண்டன் முதல் சுற்றில் பெற்ற சரமாரி அடிகளினால் இன்னும் உபாதை தணியாமல் இருக்கிறார்.

## எழுத்தறிவின்மையை ஒழிக்கும் இயக்கம்

புதுடில்லி, மே 24

மகாத்மாகாந்தியின் நூறாவது ஆண்டு விழா நடைபெற இருக்கும் 1969-ம் ஆண்டுக்கு முன்னர் பம்பாயில் எழுத்தறிவின்மையை மூற்றாக ஒழித்துவிடுவதற்கான ஒரு இயக்கத்தை இன்று பிரத மந்திரி திருமதி இந்திராகாந்தி ஆரம்பித்து வைத்தார்.

நாட்டின் முன்னேற்றம் மக்கள் எழுத்தறிவு பெறுவதில் தான் இருக்கின்றது. எழுத்தறிவு இன்மையை எப்படியும் ஒழித்துக் கட்டி விடவேண்டும். இந்தப் பணியில் டெலிவிஷன் பெரிதும் பயன்பட முடியும் என்று திருமதி இந்திரா காந்தி கூறினார்.

## 14 பிராந்திய மொழிகளின் அபிவிருத்திக்கு திட்டம்

### காங்கிரஸ் கமிட்டி ஏற்றது

பம்பாய், மே 24

ஹிந்தியின் அபிவிருத்திக்கும் அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள 14 பிராந்திய மொழிகளின் அபிவிருத்திக்கும் திட்டமொன்றைத் தயாரிக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தனியார் தீர்மானம் ஒன்றை அ. இ. கா. க. ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

ஸ்ரீ பி. என். ராஜ்போஜ் இத்தீர்மானத்தைக் கொண்டுவந்தார். உள்துறை மந்திரி ஸ்ரீ நந்தா தெரிவித்த சில மாறுதல்களுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது,

அரசியல் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள 14 மொழிகளின் அபிவிருத்திக்காக மத்தியில் தனி அமைச்சகம்ஒன்றைத்தோற்றுவிக்க வேண்டும் என்று ஸ்ரீ ராஜ்போஜ் (மகாராஷ்டிரம்) கோரினார். நாட்டின் விவகாரங்கள் தேசிய மொழியில் நடத்தப்படாதவரை நமது சுதந்திரம் பூர்த்தியானதாகக் கருத முடியாது. ராஜ்யங்களின் நிர்வாகப் பணி, அவற்றின் மொழிகளில் நடைபெறாதவரை ஜனநாயக கோட்பாட்டுக்கு அர்த்தமே இல்லை. மொழி சம்பந்தமாக ஒரே சீரான கொள்கை இல்லாதது வருந்தத்தக்கது.

தாகூர், சுப்ரமணிய பாரதி, மதுசூதன்தத் ஆகியோர் தங்களது இலக்கியப் பணிக்காக சர்வதேசப் புகழ் பெற்றனர். அவர்களில் யாரும் ஆங்கிலத்தில் நவீனமோ அன்றி கவிதையோ எழுதவில்லை என்று ஸ்ரீ ராஜ்போஜ் மேலும் கூறினார். மேற்கொண்டு கால தாமதம் செய்யாமல் மொழிப் பிரச்னைக்குப் பைசல் காணுமாறு அரசாங்கத்தை அவர் வற்புறுத்தினார். அப்பொழுது தான் இந்திய மொழிகள் அவற்றுக்குரிய ஸ்தானத்தைப் பெற முடியும் என்றார்.

தீர்மானத்தை ஆதரித்து சேத்கோவிந்ததாஸ் (ம. பி) பேசுகையில் ஆங்கிலத்திலிருந்து விடுபட்டு சுதந்திரம் என்ற சொல்லுக்கு உண்மையான அர்த்தத்தை அளிக்க மொழிகள் அனைத்தின் அபிவிருத்திக்கும் ஒருங்கிணைந்த முயற்சியை மேற்கொள்ளவேண்டும் என்று சொன்னார்.

ஹிந்தி, இதர தேசிய மொழிகள் வளர்ச்சிக்கு அரசியல் சட்டத்தில் வகை செய்யப்பட்ட போதிலும், ஆங்கிலத்தின் முக்கியத்துவம் நாளுக்குநாள் பெருகி வருகிறது என்று ஸ்ரீ பாபுபாய் ஜே. பட்டேல் (குஜராத்) குறிப்பிட்டார்.

மொழிப்பிரச்னை குறித்து சமீபத்தில் நடந்த கிளர்ச்சி ஆங்கிலத்தை நீக்கவேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டது என்றும், எந்த ராஜ்யம் அல்லது பிராந்தியத்துக்கு எதிராகத் தோன்றிய கிளர்ச்சியல்ல வென்றும் ஸ்ரீ ராம்சேவக் மிஸ்ரா (உ. பி.) குறிப்பிட்டார்.

## எலிகளும் மேனனும்

புதுடில்லி, மே 24

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் இன்று உரை நிகழ்த்திய பழைய பாதுகாப்பு மந்திரி திரு. கிருஷ்ண மேனன், இந்தியாவில் உள்ள எலிகளை எல்லாம் ஒழிப்பதற்கு ஒரு இயக்கம் ஆரம்பிக்கவேண்டும். அதன் மூலம் வெளி நாடுகளிலிருந்து உணவு இறக்குமதி செய்வதை எவ்வளவோ குறைத்துவிடமுடியும் என்று யோசனை கூறினார்.

## பாகிஸ்தானில் ஞாபகார்த்தம்

ராவல்பிண்டி, மே 24

இந்தியாவுடன் கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்ற சண்டையில் உயிரிழந்த வீரர்களின் ஞாபகார்த்தமாக நினைவுச்சின்னம் எழுப்ப பாகிஸ்தான் அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

எச்சந்தர்ப்பத்திலும் ஆத்மீக வழியிலேயே உங்கள் கவனத்தைச் செலுத்துங்கள். ஆத்மீக வாழ்வைப் பெறுவதற்கு சிறந்த கல்வி இன்றியமையாதது. வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடமும் புனிதமானது. அத்துடன் ஒருவர் வாழும் காலமும் குறுகியது. நாளை என்பது ஒருபொழுதும் வராது. ஆகையால் இன்றே செயலில் ஈடுபடுங்கள்.

— சுவாமி சிவானந்தா

ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna; Phone: 387

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு வைகாசி மீ 12 உ (25-5-66)

## தமிழ்ப் பல்கலைக்கழகம்

தமிழ்ப்பேசும் மக்களுக்கெனத் தமிழ்மொழியே போதனு மொழியாக உள்ள பல்கலைக்கழகமொன்றை உருவாக்கித் தரவேண்டுமெனக் கோரி வடக்கு கிழக்குமாகாணங்களைச்சேர்ந்த பதினெட்டு எம். பி.க்கள் கைச்சாத்திட்ட மகஜர் ஒன்று பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கொழும்பிலுள்ள பல்கலைக்கழகத்திலும் இடவசதிக்குறைவும் போதனு வசதிக்குறைவும் பெரும் பிரச்னையாக உள்ளன. இந்த அம்சத்தை மட்டுமேகொண்டு பார்த்தாலும்தமிழைப்போதனு மொழியாகக் கொண்ட பல்கலைக்கழகம் அமைக்கப்படவேண்டியது அவசியமும் அவசரமுமாகும். தமிழ்ப்பேசும் மக்களுக்கென அமைக்கப்படும் எந்தப் பல்கலைக்கழகமும், உயர்கல்வி, பட்டதாரி படிப்புக்களின் இப்போதைய கஷ்டங்களைக் குறைப்பதாகவும் தேவைகளை அதிகரிப்பதாகவும் இருக்கவேண்டும்.

தமிழ்மொழியைப் போதனுமொழியாகக் கொண்ட பல்கலைக்கழகம், பேராதனையில் போன்று, கலைப்பிரிவை மட்டுமே கொண்டதாக இருக்கமாட்டாதென்றும் நுண்கலை, தத்துவம், தமிழ்ப்பேசும் மக்களின் சமயம் முதலிய இதர பிரிவுகளையும் கொண்ட பூரண வசதிகளுள்ள பல்கலைக்கழகமாக இருக்குமென்றே நம்புகிறோம். இதன்மூலம் இந்துக்கலாசாரப் பல்கலைக்கழகம் தேவையென வாதாடி வருபவர்களின் அபிலாஷைகளையும் ஓரளவு தீர்க்கமுடியும். இதனுல்தான் நாம், தமிழப்பல்கலைக்கழகக்கோரிக்கைக்கும் இந்துக்கலாசாரப் பல்கலைக்கழகக் கோரிக்கைக்கும் பொதுவான அம்சம் நிறைய இருக்கிறதென்றும் இருதரப்பினரும் ஒன்றுசேர்ந்து பல்கலைக்கழகக்கோரிக்கை சம்பந்தமாக பொதுத்திட்டமொன்றை உருவாக்க வேண்டுமெனவலியுறுத்தி வந்தோம்.

பிரதமரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மகஜரில் தமிழ்மொழிமூலபல்கலைக்கழகம், வடக்கு மாகாண மக்களும் சுலபமாகப் போய்வரக்கூடியதாக, கிழக்கு மாகாணத்தில் ஓர்இடத்தில் அமைக்கப்படவேண்டுமென பதினெட்டு எம். பி.க்களும் கேட்டுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலா, திருக்கோணமலை மாவட்டத்திலா தமிழ்ப்பல்கலைக்கழகம் அமைக்க ஒப்புக்கொள்ளப்படுமென்பது பற்றித் தெரியவில்லை. கிழக்கு மாகாணத்துக்கென தனியாக ஒரு பல்கலைக்கழகம் இன்னும் சிறிது காலத்தில் அமைக்கப்படவேண்டியும் நேரிடலாம். ஆனுல் இப்பொழுது பல்கலைக்கழகம் அமைக்கவேண்டிய இடமாக கிழக்கு மாகாணத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டியது தானு என்பது ஆராய வேண்டிய விஷயம். பல்கலைக்கழகம் சரியான சூழலிலும் வசதிகள் நிறைந்த இடத்திலும் அமைந்திருக்கவேண்டியது அவசியம். கிழக்கு மாகாணத்தில் பிறந்தவரான விபுலாநந்த அடிகளாரே 1928-ம் ஆண்டில், தமிழ்ப்பல்கலைக்கழகம் பற்றி எழுதிய ஒரு கட்டுரையில், வடக்கு மாகாணம் குறிப்பாக யாழ்ப்பாணமே தமிழ்ப்பல்கலைக்கழகம் நிறுவப்படுவதற்குப் பொருத்தமான இடமென்றும் இங்குஉயர்கல்வி வேட்கையுள்ள மாணவர்களும், கல்விப் பரம்பரையும், கல்விமான்களும், கல்விக்கூடங்களும் இருக்கின்றனரென்றும் குறிப்பிட்டிருந்தார். இவைதவிர மாணவர் தங்கிப்படிப்பதற்கான விடுதிவசதி மட்டுமல்ல, அதிக செலவும் இங்கு ஏற்படமாட்டாது. மட்டக்களப்பிலோ திருக்கோணமலையிலோ தமிழ்ப் பல்கலைக்கழகப் பிரிவுகள் அமைக்கப்படக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம். ஆனுல் தமிழ்ப் பல்கலைக்கழகமே கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்படுவது நல்லதா வடக்கு மாகாணத்தில் அமைப்பது சிறந்ததா என்பதுபற்றி ஆராய வேண்டிய விஷயம் அறிஞர்கள், கல்விமான்கள், இதில் அக்கறை செலுத்த வேண்டும்.

தமிழ்மொழி மூல பல்கலைக்கழகக் கோரிக்கைக்கு இணங்குவதும் தமிழ்மொழிப் பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதும், தமிழ்ப்பேசும் மாணவர்களை வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஒதுக்குவதற்கு ஒரு கருவியாக அமைந்துவிடக்கூடாதென்பது நமது கவலை. கொழும்பிலும், பேராதனையிலும் உள்ள பல்கலைக்கழகங்கள் தேசியப் பல்கலைக்கழகங்களாகவே தொடர்ந்து இயங்கிவர வேண்டும். தமிழ்மொழி மூல போதனு வசதியும் அங்கிருந்துவரவேண்டும். தமிழ்ப்பேசும் மாணவர்களுக்கு அங்கு இதரமாணவர்களுக்குள்ள வாய்ப்பும் வசதியும் தொடர்ந்தும் அளிக்கப்பட்டுவர வேண்டும். கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்களில் இடமின்மையால், உயர்கல்வி பெறும் திறமையும் தகுதியுமிருந்தும் வாய்ப்பில்லாதிருக்கும் தமிழ்ப்பேசும் பிள்ளைகளுக்கு, உயர்கல்வி பெறும் வாய்ப்பை அளிக்கக்கூடியதாகத்தான் தமிழைப் போதனுமொழியாகக்கொண்ட பல்கலைக்கழகம் இருக்கவேண்டும்.

சிங்களத்தைப் போதனு மொழியாகவும் தமிழைப் போதனு மொழியாகவும் கொண்ட ஒரே கல்வி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் மூலம்தான் தேசிய ஐக்கியத்தை உருவாக்க முடியுமென்பதை, தேசிய ஐக்கியத்தை விரும்பும் அனைவரும் உணர்ந்து கொள்வது அவசியம்.

சேக்கிழர் விழாவையொட்டி தருமையாதீனம் ஸ்ரீ ல ஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் அருளிய செய்தி இது.

# "ஞாலம் நின்புகழே மிகவேண்டும்"

## சேக்கிழார் விழாவுக்கு தருமையாதீனம்செய்தி

'சைவசமயமே சமயம்' என்றும், சைவத்தின் மேற் சமயம் வேறிலை, என்றும் ஆன்றோர்களால் அறுதியிட்டுரைக்கப்பெற்ற சைவ சமயமாகிய மெய்ச்சமயம் தழைத்தோங்க அவதரித்த பெருமக்களுள் சேக்கிழார் நாயனுர் ஒருவர். 'சமயாசாரியராகிய நால்வர் பெருமக்கள் இந்நிலவுலகிற்கு வரவில்லை என்ருல் வேதம் எங்கே? ஆகமம் எங்கே? சைவம் எங்கே? என்னும் பொருள் பட அமைந்த பாடல் ஒன்று உண்டு. அதுபோலவே, 'சேக்கிழார் இந்நிலவுலகில் தோன்றவில்லையாயின் பத்திமார்க்கம் எங்கே? நாயன்மார்கள் வரலாறு எங்கே? மூவர் தேவாரத் திருப்பதிகங்கள் எங்கே? என்று கேட்கவேண்டியுள்ளது. சேக்கிழார் அருளிச்செய்த திருத்தொண்டர் புராணத்திற்கு யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர்கள் எழுதியுள்ள சூசனம், சைவசமயத்திற்கு ஒரு தனிச் சுடர் விளக்காய் மிளிர்கின்றது. சேக்கிழார் அவதாரத்தின் பயனுல் விளைந்த நலங்களுள் இச்சூசன ஆக்கமும் ஒன்று எனலாம்.

இனி ஒரு சமயத்தில் அதன் வழி நின்று அனுபவம் பெற்ற பெரியார்களது வரலாறுகள் உண்மை வரலாறுகளாகப் போற்றப்பெறுவது அவற்றைச் சொல்லுபவரது தகுதி பற்றியே யாம். ஆதலின் சைவசமயத்தின் மெய்யடியார்களது வரலாற்றைத் தோற்றுவாய் செய்தற்கு இறைவன் ஆலாலசுந்தரரையே இந்நிலவுலகிற்கு அனுப்பியருளினுர்.

''மாதவம் செய்த
தென்றிசை வாழ்ந்
திடத்
தீதி லாத்திருத்
தொண்டத் தொகை
தரப்
போது வார் அவர்
மேல்மனம் போக்கி
னுர்''

என்று கூறப்படுவதால் சுந்தரரது அவதாரத்தின் சிறந்த குறிக்கோள் திருத்தொண்டத் தொகையை உலகிற்கு அளித்தருளுவதே என்பது நன்கு விளங்கும்.

திருத்தொண்டர்களது வரலாற்றைத் தொகையாகப் பாடிய சுந்தரரும் இறைவன் அடி எடுத்துக் கொடுக்கவே பாடினுர். வகை பாடிய நம்பி யாண்டார் நம்பிகளும், திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் அருள் பெற்று அவர் அருளிச்செய்தவாறே திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடினுர். நாயன்மார்களது வரலாறு முற்றும் நன்கு விளங்குவதற்கு விரிநூல் இன்றியமையாததாயிற்று. அதன் பொருட்டுச் சேக்கிழாரது திருவவதாரம், பாலாறு வளஞ்சுரந்து நல்க மல்கும் நற்றெண்டை நாட்டில் நாலாறு கோட்டத்துட் புலியூர்க் கோட்டத்துக் குன்றத்தூரில் வேளான்குலத்தில் நிகழ்ந்தது அருண்மொழித் தேவர் என்னும் பிள்ளைத் திருநாமம் பெற்ற இவர் சோழமன்னனுகிய அனபாயனுக்கு அமைச்சுரிமை பூண்டு அமைச்சியலை நன்கு நடத்தி வருங்காலத்தில் அவனது வேண்டுகோட்கிணங்கித் தில்லைச்சிற்றம்பலத்தலத்தை அடைந்து வணங்கி, அம்பலவாணர். 'உலகெலாம்' என அடி எடுத்துக் கொடுக்க, அளவில்லாத அருமையும் பெருமையும் உடைய நாயன்மார்களது வரலாறுகளை, ஒப்புயர் பெற்றவகையில் பாடியருளினுர். இத்தகைய உண்மை அருள் நூலை அதற்கென்றே அவதரித்த சேக்கிழார் அன்றி மற்றுயாவர் பாடவல்லார்! இதனை மாதவச் சிவஞான யோகிகள்.

''தூக்கு சீர்த்திருத்
தொண்டத்தொகைவிரி
வாக்கினுற் சொல்ல
வல்லபிரான் எங்கள்
பாக்கி யப்பயனுப்பதி
குன்றைவாழ்
சேக்கி ழான் அடி
சென்னி யிருத்துவாம்''

என்று சொல்லிப் போற்றுகின்ருர். மற்றும் மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், 'பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' என்பது முதலாகத் தமது சேக்கிழார் பிள்ளைத்தமிழில் வியந்து கூறியுள்ளவற்றை முற்றிலும் ஈண்டுஎடுத்தெழுதுதல் இயலுமோ.

இத்துணையும் அம்பலவாணர், 'உலகெலாம்'என அடியெடுத்துக் கொடுத்த தன் பயனே என்பதை அனைவரும் உணர்வர். திருமுறைகள் யாவும் இறைவன் திருவருளால் வெளிவந்தவையே என்பதற்கு அவற்றின் வரலாறுகளே சான்று. அம்பலவாணர் அருளிய 'உலகெலாம்' என்னும் ஒரு பெருமொழியைச் சேக்கிழார் தமது நூலின் முதல் இடைகடைகளில் வைத்துப் போற்றியதோடல்லாது, பதினுன்கு இடங்களில் வைத்துள்ளார் என்றும் கூறுதல் உண்டு. இவ்வாறு பெரிய புராணம் முழுதும் 'உலகெலாம்' என்பது நிறைந்திருத்தல், இந்நூல் ஒரு பகுதியினர்க்கன்றி உலகம் முழுவதற்கும் உரிய நூலே என்பதையும் விளக்கும் திருத்தொண்டர் வரலாற்று விரிதில்லையிலேபாடி அரங்கேற்றப்படும் என்னும் குறிப்புத் தோன்றவே சுந்தரருக்குத் திருவாரூரில் தியாகேசப் பெருமான், 'தில்லை வாழந்தனர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று அடியெடுத்துக் கொடுத்தான் போலும்!

இத்தகைய அளப்பரும் பெருமை வாய்ந்த திருத்தொண்டர் புராணத்தை அருளிச்செய்த சேக்கிழார் நாயனுரை நன்கு போற்றுதல், சைவசமயிகட்குத் தலையாய கடனுகும். அதனையறிந்து இலங்கைவாழ் தமிழ் மக்கள், அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் அமைத்து அவரது திருநாளை ஆண்டுதோறும் கொண்டாடிவருவது மகிழ்ச்சிக்குரியதொன்று, இவ்வாண்டிலும் இம்மன்றத்தார் கொண்டாட இருக்கும் இத்திருநாள் சிறந்தினிது விளங்கவும், மன்றத்தினரும், மற்றும் இதில் பங்குபற்றுவோர் பலரும் எல்லா நலங்களும் எய்தினிது வாழவும் எங்கள் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

## சேக்கிழார் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தொண்டரின் சிவநெறி வாழ்வு, திருநீலகண்டரின் இல்வாழ்க்கைத் துறவு, கண்ணப்பநாயனுரின் கடவுள் அன்பு, பக்தி, தியாகம், மனவுறுதி என்பன எல்லோருடைய உள்ளத்திலும்-உணர்விலும் ஊன்றிப் பதியுந் தன்மை இதனுல் அன்ருே.

'வாளால் மகவரிந்
தூட்ட வல்லேனல்லேன்
மாதுசொன்ன
சூளால் இளமை துறக்க
வல்லேனல்லேன்
நாளாறில் கண்ணிடந்
தப்ப வல்லேனல்லேன் நான்
ஆளாவ தெப்படியோ?

என ஏங்கும்நிலை அன்பரிதயத்தில் ஏற்படக் காண்கிருேம்.

இந்த விதமாக ஏங்கும் நிலையொன்று அன்பர்கள் இதயத்தில்-அடியார்கள் இதயத்தில் ஏற்படுமேயானுல், அவர்கள் இந்த ஜென்மத்தில் இல்லாவிட்டாலும் கூட அடுத்துவரும் ஜென்மங்களின் இறுதியிலாவது பிறவிப் பிணியினின்றும் விடுபட்டுப் பேரின்ப வாழ்வைப் பெறுவரென்பது திண்ணம். ஏனெனில்;

'ஒருமைக்கண் தான் கற்ற
கல்வி ஒருவர்க்கு
எழுமையும் ஏமாப்பு
டைத்து'

எனவே, அந்தப் பிறவிப் பிணிக்கு மருந்து எது என்பதை அறியுங்கள்-அதை நாடுங்கள். அந்த நெறியிலே-சிவநெறியிலே வாழுங்கள் என்று வழிகாட்டிய வள்ளல் தான் சேக்கிழார்சுவாமிகள். தமது வாழ்வின் மூலமாக மட்டுமின்றி தாம் தரணிக்கீந்த திருத்தொண்டர் பெரியபுராணவாயிலாகவும் எமக்கு வழிகாட்டிச் சென்ற சேக்கிழார் சுவாமிகட்கு நாம் செய்யக்கூடிய கைமாறு ஏதும் உண்டா? உண்டு. அவருக்கு விழா எடுப்பதோடுமட்டும் நின்றுவிடாமல் அவர் காட்டிய நெறியிலே-அந்தச் சிவநெறியிலே வாழ்ந்து-பிறவிப்பயனைப் பெற்று, பேரின்ப வாழ்வையடைய நாமனைவரும் முயல்வோமாக.

## சமய சொற்பொழிவு

யாழ்ப்பாணம், புதன் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோவில் மண்டபத்தில் வரும்வெள்ளிக்கிழமைமாலை 6 மணிக்கு சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் சி. பாலசுப்பிரமணியன் 'திருவாசகத்தில் ஒருவாசகம்' என்னும் பொருள்பற்றி சொற்பொழி வாற்றுவார். வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் தலைமைதாங்குவார்.

## கூட்டம்

யாழ்ப்பாணம், புதன் கட்டைவேலி மெ. மி. பாடசாலையில் கடந்த பல வருடங்களாக ஆசிரியையாகக் கடமையாற்றிய திருமதி ஜே. ரி. சுப்பிரமணியம் தமது பதவியிலிருந்து ஒய்வு பெற்றுக்கொள்கிருர். அவருக்கு பிரியாவிடையொன்றைநடாத்துவதற்காக ஒழுங்கு செய்வதற்கும் மேற்படி பாடசாலையின் பழையமாணவர் சங்க அங்குரார்ப்பணமும் நாளை மாலை பாடசாலை மண்டபத்தில் கூட்டம் ஒன்றும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேக்கிழார் விழா மலர்

## சேக்கிழார் தந்த காப்பியம் உலகப்பொது நூல்

— பண்டிதவித்துவான் க. கி. நடராஜன் பி. ஓ. எல். —

தமிழ்நாட்டுத் தெய்வப் புலவர் பெருமானாகிய சேக்கிழார் தமிழ்நாட்டுத் தெய்வப்பெரியாருடைய சரிதங்களை முதன்முதலாகத் தமிழில்தீட்டிய - அன்பு சொட்டச் சொட்ட யாத்த - ஒப்பற்ற தனிப்பெரும் தமிழ்க் காப்பியம் பெரியபுராணமாகும். சைவத்தெய்வத்தமிழ்ப் பெருங் காப்பியத்துக்கு வழிகோலியவர் சேக்கிழாரேயாவர். இவர் கம்பருக்கு முந்தியவர். கச்சியப்பருக்கும் முந்தியவர். தமிழில் புராணம் என்ற பெயரால் முதன்முதல் எழுந்தது தெய்வத்திருத்தொண்டர் புராணமே. புராணம் என்றால் பழைய வரலாறு என்பது கருத்து. இந்த வரலாற்றுக் கொள்கைக்குப் பங்கமில்லாதவகையில் காப்பியஞ் செய்தவர் சேக்கிழார். அவர்செய்யுளெல்லாம் தெய்வம் மணக்குஞ் செய்யுள்கள். தெய்வப்புலவர் சேக்கிழார் யாத்த இக்காப்பியத்தின் பெருமையெல்லாம் இச்சிறு கட்டுரையில் அடங்குந்தரத்ததன்று. எனினும் ஒருசிலவற்றை நினைவுகூருமுகத்தால் இங்குக் கூறுவாம். சுருக்கமாகவே கூறுவாம்.

### செய்யுளிலமைந்த ஒரு சரித்திரநூல்

''எடுக்கும் மாக்கதை'' என்று சேக்கிழாரால் குறிக்கப்படும் இக்காப்பியத்தின் தலைவரும் பிற பாத்திரங்களும் சரித்திரச்சான்று பெற்றவர்கள், பிற காப்பியங்களின் தலைவர் தலைவியர் உண்மையில் இருந்தவர்களோ என்று ஐயங் கொள்ளக்கூடியவர்களால் அல்லது தெளிவாக அத்தகைய தலைவர் இருக்கவே இல்லை என்று நன்கு அறியக்கூடியவர்களாய் அமைய, சேக்கிழார் பெருமான் செய்த தேனினுமினியஇக்காப்பியத்தின் தலைவரும் பிறரும் உலகில் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிய பெரியார் ஆவர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாழ்ந்தமைக்குக் கல்வெட்டுச்சான்றுகள் கிடைக்கின்றன. அப்பரும் ஆளுடைய பிள்ளையாரும் வாழ்ந்தமைக்குச் சரித்திரச்சான்றுகள்எத்தனையோ கிடைக்கின்றன. அம்மட்டோ, அவர்கள்பாடியதேவாரங்களில் அகச்சான்றுகள் நிறையக் கிடக்கின்றன. இவை ஏனைய திருமுறைகளாலும் வலியுறுத்தப்படுகின்றன. புலிகேசியோடு போர்நிகழ்த்தி வாதாபிப் போரிலே புகழ்சான்ற வெற்றிபெற்றுக் கணபதியொடு தென்னாடு திரும்பிய வீரப்பரஞ்சோதியாரே எம் சிறுத்தொண்ட நாயனார் ஆவர். இவர் பல்லவகாலச் சரித்திரத்தில் தனிப்புகழோடு வாழ்ந்த வீரப்பெருமகனார் என்பது சரித்திரங் கற்றோர் அனைவர்க்குந் தெரியும்? இவ்வாறே மற்றையோரும் உலகில் வாழ்ந்து நமக்கெல்லாம் வழிகாட்டிய தலைவர்கள். நாயன்மார் என்றால் தலைவர்கள் என்பது கருத்து. இவர்களல்லவோ உண்மைத் தலைவர்கள். இத்தலைவர்களின் வரலாறுகளைச் செந்தமிழ்த் தேன் பிலிற்ற, பல்சுவையும் பொருந்த— சிறப்பாகப் பக்திச் சுவை நனிசொட்டச்சொட்ட வரலாறு கூறும்முறைக்குப்பங்கமில்லாதவகையிற் கூறுவது சேக்கிழார் தந்த இத்தெய்வச் செந்தமிழ்க் காப்பியம். இத்தலைவர்களின் சிறப்பைச் சொல்லவேண்டிய முறையிற் சொல்வது சேக்கிழார்க்கெளிதலது தேவர்க்கும் அரிது என்றார்கள் பின்வந்த பெரியோர்கள். தாம் நன்றாக அறியாததை வரலாற்றுக்குப் பங்கம் ஏற்படக்கூடாதுஎன்ற கொள்கையின் பேரில் சொல்லாமலே விட்டுச்செல்பவர் சேக்கிழார். பேரறியாதவர் ஊரறியாதவர் மரபறியாதவராகிய நாயன்மார்கள் சிலர் உளர் அவர்களுக்குச் சேக்கிழார் ஓர் ஊரையும் பேரையும்மரபையுங் குறித்துவிட்டிருக்கலாமல்லவா? அங்ஙனஞ் செய்யின் அஃது வரலாற்றுமுறைக்கு இழுக்கு என்பதைச் சேக்கிழார்பெருமான் அறியாதவர். இங்ஙனம் உண்மைக்கு மாறான எதனையுங் கற்பித்துச் சொல்லாத செய்யுளில்யாத்த ஒரு சரித்திரநூலாகச்சேக்கிழார் தந்த காப்பியம் விளங்குவது காண்க. இஃது செயற்கரியனவற்றைச்செய்தபெரியாரதுவரலாறுதலினாலேயே இதற்குப்பெரியர் புராணம் என்ற பெயருண்டாகி அது பெரியபுராணம் என்றாயிற்று என்பார்கள் என் ஆசிரியப் பெருந்தகையாகிய மகாவித்துவான் மறைத்திரு சி. கணேசையர் அவர்கள். இது பெரியார் வரலாற்றுநூலாக மட்டுமல்ல, தமிழ்நாட்டு வரலாற்று நூலாகவும், சைவசமய வரலாற்று நூலாகவும், அமையுஞ் சிறப்பையுங்காண்க. இவ்வேதுக்களாலும் பிறவற்றாலும் இது சைவத்திருமுறைகளுள் ஒன்றாகிய பன்னிரண்டாந் திருமுறையாக ஏனைய திருமுறைகளுக்கெல்லாம் அரண் செய்யும் முடிந்தமுடிபாக அமைந்து விளங்குவதையும் உணர்க. இதனாலன்றோ இப்பெருங் காப்பியமாகிய திருமுறையைப்பாடியருளிய சேக்கிழார் பெருமானுக்கு ஒரு புராணம்பாடினார் ஒரு பெரியார். பிள்ளைத்தமிழ் பாடினார். மற்றொருவர் பின்வந்தோரனைவரும் ஏற்ற பெற்றி போற்றினார்கள். இவ்வாறு புராணமும் பிள்ளைத்தமிழும் பெற்ற வேறொரு காப்பிய நூலாசிரியனைச் சொல்லுங்கள் பார்க்கலாம். இத்தனிச் சிறப்பு சேக்கிழார்க்கேயுண்டு. அன்பினால் இன்பம் உண்டு. அன்பினாலேயே உலகம் வாழ முடியும். அன்புஞ் சிவமும் இரண்டல்ல என்றார் திருமூலர். அத்தகைய விழுப்பம் மிக்க அன்பையே உள்ளுறையாகக் கொண்ட அன்புப் பெருநூலாகச் சேக்கிழார் தந்த செந்தமிழ்க் காப்பியம் திகழ்கின்றது. அது மட்டுமா? பெரிய அநுபூதி நூலாகவும் இது மிளிர்கின்றது. சுந்தரர் தில்லைக்கூத்த பெருமானைத் தரிசித்து நின்ற நிலையை அவரது அநுபவ நிலைவரை சென்று அநுபவித்துச் சொல்கின்றார் சேக்கிழார். ''ஐந்துபேரறிவுங்கண்களே கொள்ள அளப்பெருங் கரணங்கள் நான்குஞ் சிந்தையேயாகக் குணமொரு மூன்றுந்திருந்து சாத்துவிகமேயாக இந்து வாழ் சடையானாடும் ஆனந்த எல்லையில் தனிப் பெருங்கூத்தின் வந்த பேரின்பவெள்ளத்துட்டிளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்'' என்று அவர் அநுபவித்துச் சொல்லுஞ் சிறப்பைக் காணும்போது இது ஒரு பெரிய அநுபூதி நூல் என்பது புலப்படவில்லையா? ஒரு பானை சோற்றுக்கு ஓரவிழ் பதம் பார்க்கும் முறையில் இதனை யான் எடுத்துக் காட்டினேன். இன்னும் எத்தனையெத்தனையிடம் வேண்டுமென்றாலுங் காட்டலாம்.

சேக்கிழார் பெருமான் சோழநாட்டு முதன்மந்திரியாக விளங்கியவர். மிக்க பண்பாடமைந்தவர். நாகரிகம் என்பது இன்னதென்று அறிந்து இதனினுஞ் சிறப்பாகச் சொல்ல முடியாது என்று நாம் வாய்விட்டு உளமாரச் சொல்லக்கூடியவகையில் பைந்தமிழ் மொழியால் பண்புடன் எவற்றையுஞ் சொல்பவர். இதில் அவருக்கு அவரே ஈடு. அவர் ஒரு பல்கலைப் புலவர். நீதிநூற்றிறம் வேண்டுமா? மனுநீதிகண்ட புராணத்தையும் பிறபகுதிகளையும் படித்துப் பாருங்கள். சேக்கிழாரின் நீதிநூல் நுட்பம் சொல்லின் செல்வம். நுண்மதியெல்லாம் புலப்படுகின்றன. இசைத் தமிழறிவுபெற வேண்டுமா? ஆனாயநாயனார் புராணத்தைப் படித்துப் பாருங்கள். இன்னும் ஏனைய பகுதிகளைப் படித்தறியுங்கள்.

இப்பெருங் காப்பியம் விரிந்து பரந்த கொள்கையையுடையது என்பதை நாம் உணர்தல் வேண்டும். திருத்தொண்டத் தொகையின்கண்ணே சுந்தரர் அப்பாலுஞ் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன் என்று கூறிப் போந்தார். இந்த அப்பாலும் அடிச்சார்ந்தார் யார் என்று சேக்கிழார் விரித்துக் கூறுமாற்றைப் பாருங்கள்.

மூவேந்தர் தமிழ் வழங்கும்
நாட்டுக்கப்பால் முதல்வ
னார் அடிச்சார்ந்தமுறை
மையோடும்
நாவேய்ந்த திருத்தொண்
டத் தொகையிற் கூறும்
நற்றொண்டர் காலத்து
முன்னும்பின்னும்
பூவேய்ந்த நெடுஞ்சடை
மேல் அடம்பு தும்பைப்
புதியமதி நதி இதழி
பொருந்தவைத்த
சேவேந்து வெல்கொடியா
னடிச் சார்ந்தாரும் செப்
பிய அப்பாலு மடிச்
சார்ந்தார்தாமே.

என்று அவர் சொல்லும்போது இதனை ஒரு உலகப்பொது நூலாக பரந்த கொள்கையையும் விரிந்த மனப்பான்மையுங்கொண்ட ஒரு காப்பியமாகக் காண்பீர்கள் ஆகவே இத்தகைய உலகப் பொது நூலாகிய செந்தமிழ்க் காப்பியத்தை தந்த சேக்கிழார் பெருமானை நாம் ஏற்ற பெற்றி போற்றாவிடின், நன்றிகெட்டவர்களாவோம். தமிழ்மக்களென்றும் சைவமக்களென்றும் பெயரளவில் எம்மை அழைத்துக் கொண்டு இத்தகைய ஒரு பெருங் காப்பியத்தைப் படியாமல், ஆராயாமல், அதன் கண்ணுள்ள அருமை பெருமைகளை உணராமல் அவற்றை வாழ்க்கையில் மேற்கொள்ளாமல் ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் உயிர் வாழ்தல் நல்லதோ என்று சிந்தித்துப் பாருங்கள் தமிழ்ப்பெருமக்களே! இதுதானா நாம் சேக்கிழார்க்குக் காட்டும் நன்றி. சேக்கிழார்க்குப் பெருவிழா எடுக்க வேண்டியது தமிழருடைய கடன். சேக்கிழார்க்கு விழா எடுப்போம். சேக்கிழார் தந்த பெருங் காப்பியத்தைப் படிப்போம். நன்கு ஆராய்வோம். ஒல்லும் வகை அதன்வழி நின்று ஒழுகுவோம். சேக்கிழார் செந்தமிழ் வாழ்க. சிவநெறி வாழ்க. வாழ்க உலகெலாம்.

என்றும் இன்பம் பெருகும்
இயல்பினால்
ஒன்று காதலித் துள்ள
மும் ஓங்கிட
மன்று ளாரடி யாரவர்
வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி
யுலகெலாம்.

## சேக்கிழார் காட்டிய சிவநெறி

— செல்வி நல்லபிள்ளை நாகமுத்து —

தமிழர்தம் பண்பிலே தலைசிறந்தது நன்றிமறவாமை. இன்று மட்டுமல்ல. அன்றுதொட்டே நம் தமிழர் வாழ்விலே இப்பெருங் குணம் இரண்டறக் கலந்திருப்பதை நாம் பல வகைகளில் அறிகிறோம். இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவதுதான் வள்ளுவர்விழா, கம்பன்விழா, முத்தமிழ் விழா போன்ற விழாக்கள். இவற்றின் மத்தியிலே 'சேக்கிழார்விழா' என்ற சொல் சிந்தைக்கு இனிமையூட்டுகின்றது. ஏன்? இம்மையின் பத்தோடு மட்டும் நின்றுவிடாமல்-இறைவனை நினைந்து-அவனருள் வழிநின்று-மும்மையின்பழும் பெறுவதற்கு மனிதப்பிறவி இன்றியமையாதது என்பதை எமக்கு எடுத்துக்கூறி வழிகாட்டியவர் சேக்கிழார் சுவாமிகள் என்பதை நாம் மறந்துவிடமுடியுமா?

எனவே, சேக்கிழார்விழா நடைபெற இருக்கும் இந்நேரத்திலாவது அவரை-அவரது பெருமையை-அவர் வாழ்வினாலே இன்றும் எங்கள் மத்தியில் ஒளிவீசும் சிவநெறியை, சிந்திக்க வேண்டியது சைவநன்மக்கள் ஒவ்வொருவருடைய கடமையுமாகும்.

பாரதநாட்டின் பழம் பெருமை படைத்த தொண்டை மண்டலத்தே பிறந்தவர் அருண்மொழித் தேவர். இவரது எதிர்கால வாழ்வை எப்படியோ அறிந்தவர்கள் போலப் பெற்றோரும் பிறந்தவுடனேயே இப்பெயரைச்சூட்டி மகிழ்ந்தனர். தமது மரபிற்குப் பெருமை தேடிக்கொடுத்த காரணத்தினாலேயே சேக்கிழார் என்ற பெயரும் இவரிடம் சேர்வதாயிற்று.

அறிவு, ஆற்றல் அவரது நல்லொழுக்கம்என்பன அவருக்கு அமைச்சர் பதவியைத் தேடித்தந்தன. அநபாய சோழமகாராஜாவின் அரசியலிலே அமைச்சராக வாழ்ந்த அவர் அரசியலிலே அமைச்சராக வாழ்ந்த அவர், அரசியலோடு மட்டும் நின்றுவிடாது-அவனடி மறவாச்சிந்தையோடு வாழ்வாராயினர். இதன்பயனாக இவர் பிறந்த குன்றத்தூரிலே-இவரது பெருமுயற்சியால் 'திருநாகேச்சுரம்' என்ற திருக்கோயிலும் தோன்றி வளர்வதாயிற்று.

சிவசிந்தையும், சிவனடி மறவா செம்மையும்பெற்ற சேக்கிழார் சுவாமிகள் தமது அன்பிற்குரிய மன்னவன் பரசமயப் பிரியராக மாறி-அந்நூல்களில் ஈடுபாடுகொண்டு வாழ்வதைக் கண்டு-அரிதினுமரிய மானிடப்பிறவியை அவமே கழிப்பது நன்றன்று என இடித்துரைத்து- திருத்தொண்டர் பெருமை கூறும் திருத்தொண்டத் தொகையினைப் பாடி விளங்கவைத்தனர்.

அம்மன்னனின் வேண்டுகோளுக்கிணங்கவும், தாம் பெற்ற இன்பம் தரணியிலுள்ளோர் பெற்றுப் பெரும் பயனடையவேண்டும் என்ற பெருநோக்குடனும் திருத்தொண்டர்புராணம் பாடச் சிதம்பரத் தலத்தை அடைந்தனர் அம்மையப்பனின் அடியார்களாகிய சிவதொண்டர்களின் அடிமைத் திறனைப் பெருங்காப்பியமாகப் பாட எண்ணிய அவர், அப்பெருமானது திருவடிகளைப் பிரார்த்தித்து நின்றனர்.

வேண்டுவார் வேண்டுவதை ஈயும் விமலனார் 'உலகெலாமுணர்ந் தோதற்கரியவன்' என்று அடியெடுத்துக் கொடுக்க, அது கேட்டு அகம் குளிர்ந்த அருண்மொழித்தேவர், அப்புராணத்தைச் சிறப்புறப் பாடி முடித்தனர். அநபாயசோழனும், மற்றவர்களும் அப்புராணத்தைப் போற்றி மகிழ்ந்து 'தொண்டர்சீர் பரவுவார்' என்னும் நாமத்தையும் சூட்டிமகிழ்ந்தனர். பன்னிரண்டாந் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணத்தைப் பாடியது மட்டுமின்றி தமது வாழ்விலே சிவவேடந் தாங்கிச் சிவனடியாராக வாழ்ந்து சிவனடி நீழலை அடைந்தவர் சேக்கிழார் சுவாமிகள். திருத்தொண்டர். புராணம பாடநினைந்த சேக்கிழார் சுவாமிகளுக்கு அவர் விரும்பியவாறு-விரும்பிய நேரத்திலே-இறைவன் அருள் புரிந்து அடியெடுத்துக் கொடுத்தாரென்றால் அவர பக்தியின் மேன்மைக்கும், அப்புராணத்தின் பெருமைக்கும் வேறு சான்றும் வேண்டுமா?

அவரது வாழ்க்கை, அவர் வாழ்ந்துகாட்டிய சமய நெறி, எம்மனோர்க்குசிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது. உலகியலில் ஈடுபட்ட மக்களும்கூடத் தமது வாழ்க்கை வளத்தை எண்ணி ஒவ்வொரு தொழிலிலே ஈடுபட்டிருந்தாலும் உள்ளக்கோயிலில் அவன் திருவுருவத்தை அமைத்து நற்சிந்தனைகளாகிய மலர்களைக்கொண்டு நாளெல்லாம் பகவானைப் பூசித்து வாழ்பவர்கள் பிறவிப்பயன் பெற்றுப் பேரின்பமடைவார்கள் என்பதற்கு அவர் வாழ்க்கை, அவர் வாழ்ந்த சிவநெறி சான்று பகர்கின்றது.

அதுமட்டுமல்ல. அவர் தந்த திருத்தொண்டர்புராணமானது சிவனடியார்களின வாயிலாக எமக்கு இறைவனின் எண்ணத்தை எழுப்புகின்றது; இதயத்தில் அன்பைப் பெருக்குகின்றது. படிக்குந்தோறும் கேட்குந்தோறும் பக்தியை வளர்க்கின்றது. சமயவாழ்வை-சமயநெறியை- சன்மார்க்க சிந்தனைகளை ஊட்டுகின்றது. சமயகுரவர்களின் செயற்கருஞ் செயல்கள், சிறுத்

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேருவை நினைவுகூருவோம்

— தெ. சந்திரகுமாரன் —

ஆசிய ஜோதி நேரு மறைந்த தினமாகிய இம்மாதம் 27-ம் திகதியை நினைவுகூரும் முகமாக இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.

"உலகமே உறங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இந்தியா விழிப்புணர்ச்சிபெற்றுவிட்டது. விடுதலை அடைந்துவிட்டது. அடிமைத் தளையை அறுத்தெறியும் சுதந்திரம் ஒவ்வொரு நாட்டிற்கும் உண்டு, நாம் சுதந்திர மக்களாகிவிட்டோம். இனிமேல் எங்கள் நாடு உலகம் முழுவதும் தன்மைபெறக்கூடிய வகையில் தொண்டாற்றுவோமாக" என்று ஒரு ஒப்பற்ற குரல் 1947-ம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றத்திலே கேட்டது. அக்குரலின் கர்த்தா ஸ்ரீ ஜவஹர்லால் நேரு ஜேஆவார்,

இந்திய சுதந்திரத்துக்காகப் பாடுபட்டோர் முதல் வரிசையில் இடம்பெறத்தக்க ஒப்பற்ற தலைவர், முடிசூடாமன்னர் நேரு மறைந்து இம்மாதம் 27-ம் திகதியுடன் இரண்டு வருடங்களாகின்றன.

நேரு சிறந்த அரசியல் ஞானி; ஏகாதிபத்தியத்தின் எதிரி. இந்தியா விடுதலை அடைந்தது முதல் தொடர்ந்து 18 வருடங்கள் பிரதமராயிருந்து ஈற்றில் உயிர் துறந்தார்.

பண்டித ஜவஹர்லால் நேரு ஒருமுறை தனது தந்தையாரைக் கூடத்தேர்தலில் வெற்றிபெற்றார். இந்தியாவில் ஒருமுறை பஞ்சம் மேற்பட்டபோது அரசாங்கம் இவரது குடும்பத்திலே கடன் வாங்கியது. அத்துணை பெரும் செல்வந்தர், நினைத்திருந்தால் நாட்டையே தன்னுடையதாக்கி சர்வாதிகார ஆட்சி செய்திருக்கலாம். ஆனால் தேசியப்பற்று, மக்கள் பற்று, ஜனநாயக உணர்ச்சி ஆகியன அவரை அவ்வாறு செய்யவொட்டாது தடுத்தன.

இவர் இந்திய சுதந்திரப் போரில் குற்றஞ்சாட்டப்பட்டபொழுது நீதிமன்றத்தில் கூறிய மொழிகள் மிக மிக உடுக்கமானவை.

"இந்நாடு எங்கள் தாய் நாடு. உரிமை கோரியதற்காக நாங்கள் குற்றவாளிக் கூண்டில் நிற்கின்றோம். ஆனால் உரிமை தர மறுத்ததற்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே ஒருநாளைக்கு உலக நீதிமன்றத்தில் நிற்க வேண்டிநேரிடும்."



## பார்புகழும் நேரு மாமா!

— கே. என். ராஜா —

எங்கள் மாமா நேரு மாமா
எல்லோர்க்கும் நல்லமாமா
மங்காத புகழ் வீசும்
மலர் வதன முளமாமா
சாதி மத பேதம் இன்றி
சலித்திடா துழைத்த மாமா
பலரும் போற்றும்
நல்ல மாமா
பார் புகழும் நேரு மாமா.

# விவாத மேடை 2

ஒவ்வொருநிமிடமும் விஞ்ஞானம் வளர்ந்துகொண்டிருக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டில், சந்திர மண்டல ஆராய்ச்சியா? "ஐயோ வேண்டவே வேண்டாம்" என்று கூறுவது பெரியதோர் அறிவீனமாகும்.

தூசிப்படலத்தினால் மூடப்பட்டிருக்கும் ஓர் கோளம் தான் சந்திரன் என்றும் அதனால் மக்கள் அங்கு சென்றால் புதையுண்டு போவார்கள் என்றும் விஞ்ஞானிகள் நம்பி வந்தார்கள். ஆனால் அண்மையில் அனுப்பிய லூனா-9 என்னும் செயற்கைக் கோளம் சேதமுறாது சந்திரனில் இறங்கியும், அதிக பாரம்மிகுந்த அக்கோளம் புதையாமல் இருந்தது. அதனால் சந்திரன் ஓர் கடினமான நிலப்பரப்பை யுடையதுஎன்றும் அதனால் அங்கு மக்கள் தங்கமுடியும்என்றும் நிச்சயம் செய்யப்பட்டுள்ளது. ஆயினும் விவாதத்திற் பங்குபற்றிய அனேகர்குறிப்பிட்டதுபோல் வானவெளிப் பிரயாணத்தினால் அனேக கோடிக்கணக்கான பொருள் செலவுஏற்பட்டது உண்மையாகும். எனினும் அதனால் மனிதனின் விஞ்ஞான அறிவு வளர்ந்ததேயன்றி குறையவில்லை.

1970-ம் ஆண்டிற்கு முன் சந்திரனின் ஓர் மனிதர் குழுவொன்றை இறக்குவதற்கு அமெரிக்காதிட்டமிட்டுள்ளது. இத்திட்டம்நிறைவேறி சந்திரனில் மக்கள் இருக்கலாம் என்று முடிவு செய்துவிட்டால் ......? நிமிடத்திற்கு 120 பேர்வீதம் பெருகிவரும் ஜனத்தொகையினால் ஏற்படும் உலகநெருக்கடியைக் குறைக்க வசதியாக இருக்குமல்லவா? எனவே எக்கோணத்தில் நோக்கினும், சந்திர மண்டலப் பிரயாணம் நன்மையே தரும்.

—நா. நகுலேந்திரன்
நுகேகொடை

ஃ ஃ ஃ

விஞ்ஞானத்தில் உண்டான புதுமைகளில் சந்திர மண்டலப் பிரயாணமும்ஒன்றாகும். அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் வானவெளியிலே பலத்த போட்டியிருந்தும் முதன்முதலில் 1966-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ரஷ்ய லூனா 9 என்ற விண்வெளிக்கப்பல் வானவெளியில் இறங்கி நாம் அறியாதிருந்த பல அரியதகவல்களை வெளிப்படுத்தியது.

பூமியிலே அரிதாகக் கிடைக்கும் உலோகப் பொருட்கள் ஏராளமாகச் சந்திரனில் இருப்பதால் அவற்றைப் பூமிக்குக் கொண்டுவந்து நிலைமையைச் சீராக்கலாம். இப்பிரயாணத்தினால் நமக்குப் பல நன்மைகள் உண்டு.

—தா. பத்மநாதன்
வல்வெட்டித்துறை

ஃ ஃ ஃ

நாடும் ஏடும் போற்றும் அறிஞர்களையும், வியத்தகு சாகசச் செயல்புரியும் விஞ்ஞானிகளையும், எமக்கு நல்கியவள் உலக அன்னை 20ம் நூற்றாண்டாகிய இப்புரட்சிக்காலத்திலே பூமி உருண்டை வடிவானது என்பதையே பொய்ப்பிக்கும் விஞ்ஞான காலத்திலே எதனையும் அறியவேண்டும், ஆராய வேண்டும் என்னும் ஆவல் எல்லோரிடத்திலும் உதயமாகிக் கொண்டிருப்பது இயற்கையே நாம் வாழும் உலகத்திலிருந்து வேறுபட்ட ஒரு கிரகமாகிய சந்திர மண்டலத்தை மனிதன் எப்படியாவது அடையவேண்டும், அதனை ஆராய்ந்து பலனடைய வேண்டும் என்றுதான் விஞ்ஞானிகள் நினைக்கிறார்கள். விண்வெளிக் கப்பல்களையும் செயற்கைக்கோளங்களையும் அனுப்பிப் பரீட்சிக்கின்றார்கள்


சந்திர மண்டலம் மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த வளி இல்லாத ஓர் அண்டவெளி. மக்களுக்கு வேண்டிய நீர், காற்று, அங்கு இல்லை ஆனால் பவனமே இல்லாத அங்கு விலைமதிப்பற்ற இரத்தின வைரக் கற்கள் உள்ளன என்று நினைக்கிறார்கள். ஆனால் இக்கூற்று உண்மையா என்பது மனிதன் அதனை ஆராய்ந்த பின்பே புலப்படும். மனிதன் இம் மண்டலத்தை அடைந்தால் அங்கு தாவரங்கள் வளர்கின்றனவா? மனிதன் வாழ முடியுமா? என்று ஆராய்ச்சி நடத்துவான். அங்கு செல்வங்கள் இருக்குமானால் அது மனிதனுக்கு நன்மையைத் தரும். இவ் ஆராய்ச்சிகளினால் ஏற்படும் பலன்மட்டுமல்ல, மனிதனின் முன்னேற்றத்திற்கு அவன் முன்னே கண்ட பல ஆராய்ச்சிகளுக்கு இது ஓர் அறிவுச் சிகரமாகவே அமையும் என்பதில் ஐயமில்லை.

—சரோஜினி கந்தையா

ஃ

**கவனிக்கவும்**

விவாதமேடை இலக்கம் இரண்டுக்கு நீங்கள் உங்களது கருத்துக்களை எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு முன்னதாக அனுப்பிவைக்க வேண்டும். அடுத்த வாரத்துடன் விவாதமேடை இல. 2 பூர்த்திபெறும். அனுப்பவேண்டிய விலாசம்: 'விவாதமேடை 2' மாணவர்மலர், 'ஈழநாடு' த. பெ. 49, யாழ்ப்பாணம்.




## கலைக்கூடங்கள்

-- பரராஜசேகரம் --

செக்கோஸ்லோவேகியா நாட்டுக் கலைக் கூடங்களே அன்று தேசிய விடுதலை இயக்கங்களின் பிரசார மேடைகளாக அமைந்தன. 1848 - 49 ம் ஆண்டுகளில் செக். தியேட்டரில் அரங்கேற்றப்பட்ட நாடகங்கள் தேசிய சமூக விடுதலை எண்ணங்களை வெளியிடுவனவாக அமைந்தன.

பிறேக்கிலுள்ள தேசிய தியேட்டர் சாரதாரண மக்களிடமிருந்து சேர்த்த நன்கொடையின் மூலமே கட்டப்பட்டது. ஆனால் இந்தத்தியேட்டரைக் கட்டியவுடன் இது எரித்து தரைமட்டமாக்கப்பட்டது. மீண்டும் பொதுமக்களிடம் நன்கொடை வசூலித்து, மீண்டும் கட்டப்பட்டு 1883-ம் ஆண்டுஆரம்பிக்கப்பட்டது.

ஸ்லோவாக்தேசிய தியேட்டர் 1920-ம் ஆண்டு ஆரம்பமானது. தற்பொழுது ஒவ்வொரு பிரதேசத்திலேயும் ஒவ்வொருதியேட்டரும், சில இடங்களில் இசை, நாடக, நடனக்குழுக்களும் உண்டு.

பிறேக்கில் மட்டும் தேசிய தியேட்டர், ரைல் தியேட்டர், ஸ்மெற்றூன்தியேட்டர், மத்திய இராணுவத் தியேட்டர், ஏதார்த்த தியேட்டர் என உண்டு. ஏனைய மாகாணத் தலைநகர்களான பிறட்டிஸ்லாவாவில் 4, பிர்னோவில் 7, ஒஸ்டிறுவாவில் 5, பில்ஷேனில் 2 தியேட்டர்களும் உள.

1948-ம் ஆண்டு தொடக்கம் வருடாந்த நாடக விழாக்கள் ("தியேட்டர்களின் அறுவடைகள்") நடைபெற்று வருகின்றது. இதில் நாட்டில் உள்ள எல்லா நாடக மன்றங்களும் பங்குபற்றுகின்றன. இந்தத் "தியேட்டர்களின் அறுவடைகள்" பிறேக்கில், இன்றேல் பிறேட்டிஸ்லாவாவில் நடைபெறுகின்றன. பிறேக் தான் அகிலப் பொம்மைத் தியேட்டர் குழுவின் இருப்பிடம். காலஞ்சென்ற பேராசிரியர் ஸ்குப்பா தான் இரண்டு பொம்மைத் தியேட்டர்களின் சிருட்டி கர்த்தாவ ஆவார்.

துப்பறியும் தொடர்நவீனம்

# சோலை வனம்

— கே. ரி. இராசசிங்கம் —

அந்த பங்களாவும் எஸ்டேட்டும் ஓர் டாக்டருக்குச் சொந்தமானது என்பதை அதில் பொறித்திருந்தஎழுத்துக்கள் வெளியிட்டன.

டாக்டர் ஒருவரே அந்த பங்களாவுக்கு உரிமையாளர் ஆனபடியால் நிச்சயம் தனக்கு இரவுக்கு அடைக்கலம் தருவார் என்ற நம்பிக்கை இராமுவின் உள்ளத்தில் உறுதியாயிற்று.

"பங்களாகேற்றை"த்திறந்துதனது சைக்கிளையும் தள்ளிக்கொண்டே பங்களாவுக்குள் நுழைந்தான். பாதையின் இரண்டுபக்கமும் நீண்ட பெரிய மரங்கள், அந்தப் பாதை "கேற்று"க்கும் பங்களாவுக்குமிடையில் ஏறக்குறைய இருபது யார் நீளமாக இருந்தது.

இராமு பங்களா வாசலை அடைந்தவுடன் சைக்கிளைச் சாத்திவிட்டு கதவைத் தட்டுவதற்குக்கையையோங்கினான் அவன் கைஓங்குவதற்கும், பங்களாவுள்ளிருந்து 'கிறீச்' என்ற பயங்கரமான, பெண்ணின் ஓலம் கேட்பதற்கும் சரியாகஇருந்தது.

சிலகணம் அவன் ரோமங்கள் சிலிர்த்துக்கொண்டன. உடலெங்கும் ஒருதடவை மின்சாரம் பாய்வதுபோன்றிருந்தது. பங்களாவின் வாசலில்நின்றவாறே அவன் தலைக்குமேல் இருந்த இரண்டாவது மாடியிலிருந்த கண்ணாடிச் சாளரத்தினூடே தெரிந்த மங்கலான ஒளியினை ஒருமுறை ஏறிட்டுப் பார்த்துக்கொண்டான். ஓரளவு தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கதவில் பொருத்தியிருந்த குமிழியால் உள்இருப்பவர்களுக்குத் தனது வருகையை அறியக்கொடுக்கும் விதமாகத் தட்டினான்... (தொடரும்)

நமது விஞ்ஞானம்

# டெலிவிஷன் புதிர்

— தி. விஜயேந்திரன் —

"டெலிபோன் மூலமாக ஒரு மனிதனுக்கு இன்னொரு மனிதனின் படத்தை அனுப்பலாம். உங்களுக்கு திகைப்பாக இருக்கலாம். டெலிபோன்மூலம் செய்திதான் அனுப்பலாம். படத்தை எப்படி அனுப்புவது?

ஒரு 'கிராப்' பேப்பரையும் பென்சிலையும் எடுத்துக் கொள்ளுங்கள். டெலிபோன் மூலம் உங்களின் நண்பனை அழைத்து அவரையும் அதே போன்று 'கிராப்' பேப்பரையும் பென்சிலையும் எடுத்து வைத்துக்கொள்ளச் சொல்லுங்கள். கிராப் காகிதத்தில் நீங்கள் முன்னதாக ஒரு மனிதனின் படத்தை வரைந்துகொண்டிருக்க வேண்டும். நிழற்படமாக. இப்போது போன்மூலமாக மனிதனின் படத்தின் பாகங்கள் உள்ள கட்டங்களை கறுப்பு, வெள்ளை என்று மாற்றி வரிசையாகச்சொல்லிக்கொண்டு வாருங்கள். போனின் மறுபக்கத்தில் உள்ள உங்களின் நண்பன் தன்னிடமுள்ள கிராப் காகிதத்தில் நீங்கள் குறிப்பிடும் கட்டங்களை பென்சிலால் கறுப்பாக்கிக்கொண்டுவருவானானால் கொஞ்ச நேரத்திற்குள் நீங்கள் வரைந்துள்ள மனித உருவம் அவன் 'கிராப்' காகிதத்துக்குப் போய்ச் சேர்ந்துவிடும்.

இதே முறையில்தான் டெலிவிஷன் வேலை செய்கிறது. (ரேடியோவில் குரலைக் கேட்கின்றோம். டெலிவிஷனில் பாடுவோர், பேசுவோரின் உருவத்தைக்காணலாம்.) ஒலியை மின்சாரமாக மாற்றித் தரப்படுகிறது ரேடியோவில். டெலிவிஷனில் ஒலியோடு ஒளியும் மின்சாரமாக மாற்றப்பட்டு மறுபடியும் அந்த மின் அலைகள் ஒளியாக மாற்றப்படுகின்றன. இது எப்படி?

(தொடரும்)

'விடிவெள்ளி' நினைவு

# கட்டுரைப் போட்டி

முடிவு திகதி 10-6 66

'விடிவெள்ளி' (க. பே. முத்தையா) நினைவாக விடிவெள்ளி நினைவுமன்றம் நடாத்தும் கட்டுரைப்போட்டி முடிவு திகதி 10-6-66 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதன் முழுவிபரங்களும் 18-5-66 திகதிய 'ஈழநாடு' வாரமலர் 'சிறுவர் பூங்காவில் வெளியிடப்பட்டது.

கட்டுரையின் தலைப்பு: **'எது வாழ்வு'**

சகல பாடசாலை, கல்லூரி மாணவ மாணவியரும் போட்டியில் பங்கு கொள்ளலாம். கட்டுரை 'பூல்ஸ்காப்' தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படல் ஆகாது. தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப்படல் வேண்டும். வயதுக் கட்டுப்பாடு இல்லை. தம் சொந்த ஆற்றலினால் எழுதப்பட்ட கட்டுரை என்பதை நிரூபிக்க, கல்லூரி அதிபர்கள் அல்லது பாடசாலைத் தலைமை ஆசிரியர்களிடம் அத்தாட்சி பெற்று அனுப்புதல் வேண்டும். தெரிவு செய்யப்படும் மூன்று கட்டுரைகளுக்குப் பணமும் புத்தகமுமாக, மூன்று பரிசில்கள் வழங்கப்படும்.

கட்டுரைகள் அனுப்பப்படவேண்டிய முகவரி: ஆசிரியர், 'சிறுவர்பூங்கா', ஈழநாடு, த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேவிபுரம் குடியேற்றவாசிகள்

# மூன்று ஏக்கர் காணி வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

தேவிபுரம்குடியேற்றவாசிகள் தங்களுக்கு ஒரு ஏக்கர் மட்டும் நெற்காணி வழங்குவதை ஏற்க மறுத்து முன்னர் அளிக்கப்பட்ட வாக்குறுதிப்படி மூன்று ஏகர் நெற்காணி வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து காணி எல்லை காட்டுவதற்கான திகதியை மாவட்ட காணி அதிகாரி பின்போட வேண்டுமென்று கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் வவனியா அரசாங்க அதிபரைத் தந்திமூலம் கேட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக தேவிபுரம் கிராமசபை அங்கத்தவர் திரு. அ. ப. கனகரத்தினமும் அகில இலங்கைக் காந்திய சேவாசங்கத்தின் தருமபுர நிலையப் பிரதிநிதியுமான திரு. ச. கந்தசாமியும் கொழும்பில் தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளையும் வவனியா எம். பி., உடுப்பிட்டி எம். பி. ஆகியோரையும் சந்தித்து தேவிபுரம் குடியேற்ற மக்களின் குறைகள்பற்றி எடுத்துக் கூறியுள்ளனர். இதுசம்பந்தமாகதங்களை மீண்டும் சந்தித்து விஷயத்தைத் தெரிவிக்குமாறு எம். பி.க்கள் தூதுக்குழுவினரைக் கேட்டுக் கொண்டதாகத தெரிகிறது.

---

## தற்கொலை

கிளிநொச்சி, செவ்வாய்

குஞ்சுப்பரந்தனைச் சேர்ந்த பி. நாகலிங்கம் (29 வயது) விவசாயத்தில் ஏற்பட்ட நஷ்டத்தினுல் மனமுடைந்து நச்சுத்திராவகம் அருந்தித்தற்கொலை செய்து கொண்டார்.

கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் மரணவிசாரணை நடத்தினுர். தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.


**கார், லொறி, றெக்டர், லோஜ், தண்ணீர் பம்**

முதலியவற்றிற்கு

றீபோரிங், றீசிலிவிங், வால்(f) சீற் அடித்தல், வால்(f) சீற் வெட்டுதல், வால்(f) பேஸ் பண்ணுதல்

முதலியவற்றிற்கும்

கார், லொறி, றெக்டர்

ஆகியவைகளுக்கு

**விசேஷ யந்திரங்கள் மூலம்**

பிறேக் றம், பிறேக் லைன,

கிளச் அசெஸ்மென்ட் செய்வதற்கும்

மற்றும்

சகல விதமான

கடைச்சல் - புரி வெட்டுதல்

போன்ற வேலைகளுக்கும்

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்!

## நோத் என்ட் மோட்டார் வேக்ஸ்

( ஓட்டோமோமயில் என்ஜினியர்ஸ் )

291, ஸ்ரான்லி ரோட், — யாழ்ப்பாணம்.

( அ. சி. விஷ்ணுசுந்தரம் கட்டிடம் )



### வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத

## திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு?

இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

**தனுதிகாரி,**

**தேர்த் திருப்பணிச்சபை,**

தேவஸ்தான காரியாலயம்,

வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,

வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்


## கோவில் உற்சவங்கள்

துன்னுலை, செவ்வாய்

துன்னுலை வடக்கு அல்லைப்பெற்றுன் சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் உற்சவம் நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. அல்வாய் பிரம்மஸ்ரீ தேவராஜக்குருக்கள் கொடியேற்றத்திருவிழாவை நடத்திவைத்தார். உற்சவங்கள் பத்து நாட்கள்வரை நடைபெறும்.

ஃ ஃ ஃ

கரவெட்டி கிழக்கு நுணுவிற் பிள்ளையார் கோயில் உற்சவங்கள் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள்வரை நடைபெறும். 9-ம் நாள் ரதோற்சவமும், 10-ம் நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

ஃ ஃ ஃ

நாளை நடைபெறும் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலய 9-ம் திருவிழாவில் விசேஷ நாதஸ்வர இன்னிசைக் கச்சேரிகள் நடைபெறும், பிரம்மஸ்ரீ எஸ். ஆர். சந்திரஐயரின் 'மீனுட்சி கல்யாணம்' என்னும் பொருள் பற்றிய கதாப்பிரசங்க அரங்கேற்றமும் நடைபெறும்.

---

## அரவம்தீண்டி மரணம்

கிளிநொச்சி, செவ்வாய்

கிளிநொச்சிப் பகுதியிலுள்ள திருநகரைச் சேர்ந்த பொன்னையா காசிராமன் (27 வயது) என்பவர் அரவம்தீண்டியதால் மரணத்துக்குள்ளானுர்.

கிளிநொச்சிப்பகுதி மரண விசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் நடாத்திய மரணவிசாரணையொன்றின் போதே மேற்கண்ட விபரம் தெரியவந்தது. மரணவிசாரணையின் போது, காலஞ்சென்றவரின் துணைவியார் இராசேஸ்வரி முத்துபாக்கியம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

அரவம் தீண்டியதால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

---

## காட்டில் காலற்ற சடலம்

குளியாப்பிட்டியா, செவ்.

காலற்ற மனிதனின் சடலமொன்று தெதுருஓயாவுக்குச் சமீபத்திலுள்ள அடர்ந்த காடொன்றில் காணப்பட்டது.

இச்சடலம் ஜெமிஸ் சிங்கோ என்பவரது என அடையாளம் காணப்பட்டது.

மரணவிசாரணையின் போது நஞ்சூட்டிக்கொலை செய்யப்பட்டதாகத் தெரியவந்தது. இக்கொலை சம்பந்தமாக புஞ்சிபண்டா என்பவரை ஹெட்டிப்போல பொலிஸார் கைதுசெய்துள்ளனர். பொலிஸார் தொடர்ந்து விசாரணைசெய்து வருகின்றனர்.

---

## உல்லாசப்பிரயாண உதவி

கொள்ளுப்பிட்டி, செவ்

இலங்கையில் உருவாக்கப்படும் உல்லாசப் பிரயாண கூட்டுஸ்தாபனத்துக்கு ஆலோசனை தெரிவிக்குமுகமாக, இந்திய உல்லாசப்பிரயாண இலாகாவுக்குப் பொறுப்பாக இருந்து ஓய்வு பெற்ற எஸ். என். சிப் அடுத்தமாதம் இங்கு வரவிருக்கிறுர்.

---

## பலப் பரிசோதனைக்கு அதிகநாள் இல்லை

பீகிங், மே 23

அமெரிக்காவுடன் சீனு பலப் பரிசோதனைசெய்யும் நாள் அதிக தூரத்திலில்லை என வெளிநாட்டு மந்திரி ... ... பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

## 'ஐக்கியம், சமாதானம் முன்னேற்றத்துக்கு தேவை'

எட்டியாந்தோட்டை, செவ்

'நாட்டின் பல பிரச்னைகளையும் தீர்க்க பல சமூக மத மக்களுக்கிடையிலும் நல்லெண்ணமும் சமாதானமும் ஐக்கியமும் நிலவ வேண்டும். இவ்வித சூழ்நிலை நிலவினுல்தான் நாடு முன்னேற்றமடையும். இதனை ஒவ்வொரு பிரஜையும் நன்குணர்ந்து அரசாங்கத்தின் சகல முயற்சிகளுக்கும் ஒத்துழைப்புத்தரவேண்டும்' இவ்வாறு எட்டியாந்தோட்டையிலுள்ள நந்தராமா ஆலயத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எட்டியாந்தோட்டை நேத்திர நிகாசிக சங்க பெரமுனையின் தலைவர் வண அலவத்துர தம்மானந்ததேரோபேசுகையில் கூறினுர்.

---

## பெரியோர் கடமைபற்றி கி. ச. தலைவர்

கோண்டாவில், செவ்.

''தமிழ் இலக்கிய நூல்களில் இராமாயணம், பாரதம், சிலப்பதிகாரம்போன்ற எத்தனையோ அரியநூல்கள் இருக்கின்றன. இந்நூல்களை சிறுர்களுக்குக் கற்பித்து இலக்கியத்துறையில் அவர்களை ஊக்குவிக்கவேண்டியது கற்றுணர்ந்த பெரியோர் கடமையாகும்.''

மல்லாகம் கலைமகள் சனசமூக நிலையத்தின் ஆதரவில் நடைபெற்ற கலைவிழாவில் மல்லாகம் கிராமசபைத்தலைவர் திரு. வை. இராசதுங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னுர்.

திரு. சி. ஆறுமுகம் பேசுகையில், மனிதனை மிருகத்தன்மையான செயல்களில் இருந்து பாதுகாப்பது சமயதத்துவ நூல்களென்றும், சமயங்கள் சமூகத்தைத் திருத்தி அன்பு, தியாகம், மனச்சாட்சி ஆகியவற்றை மக்களிடையே வளர்க்கும் தன்மை வாய்ந்ததென்றும் கூறினுர்.

---

வார்ஸா, மே 24

போலந்திலுள்ள அமெரிக்க தூதராலயத்தைச் சேர்ந்த 3 ராணுவ அதிகாரிகள் நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவிடப்பட்டுள்ளனர்.

## பக்திப்பாடல்கள்

கொழும்பு, புதன்

இம்மாதம் 27-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 7-45 முதல் 8-15 வரை இலங்கைவானெலியில் திரு. தி. மாணிக்கவாசகர்சமயகுரவர்கள்நால்வர் அருளிச்செய்த தேவார, திருவாசகங்களிலிருந்து சில பாசுரங்களை பண்ணுடன் இசைப்பார்.

---

## உணவு மான்யம் விசேஷகுழு நியமிக்கப்படும்

கொள்ளுப்பிட்டி, செவ்.

உணவுப் பண்டங்களுக்காக அரசாங்கம் செலவிடும் பெருந்தொகையான பணத்தை மிச்சப்படுத்துவதற்கு பிரதமரிடம் பலரும் சமர்ப்பித்துள்ள யோசனைகள் பற்றி ஆராய்வதற்கென பிரதமர் ஓர் விசேஷ கமிட்டியை நியமிக்கவிருக்கிறுர். அரிசி மான்யத்தைக் குறைப்பதற்குத் தெரிவிக்கப்பட்ட யோசனைகளில் ஒன்று பின்னைகளுக்குஇப்பொழுதுகொடுக்கப்படும் அரிசியைக் குறைப்பது அல்லது அரிசி பெறுவதற்கான வயதை அதிகரிப்பதாகும்.

---

## ஆண்டுக்கு 120கோடி

புதுடில்லி, மே 24

இந்தியாவில் ஆண்டொன்றுக்கு 120 கோடி தேங்காய்கள் உற்பத்தியாகின்றன என்றும், இவற்றில் பாதி இளநீராகப் பறிக்கப்பட்டு வீணுக்கப்பட்டு வருவதாயும் கூறப்படுகிறது.

---

## ஜப்பான் மறுப்பு

டோக்கியோ, மே 24

பாகிஸ்தான் விமானங்கள் சீனுவிலுள்ள காண்டன் வழியாக டோக்கியோ வருவதற்கு அனுமதியளிக்க ஜப்பான் மீண்டும் மறுத்துவிட்டது. ஜப்பானுக்கு சீனுவுடன் ராஜீய உறவு இல்லாததே இதற்கு காரணமென அறிவிக்கப்பட்டது.

---

## தீவிபத்துக்கு நால்வர் பலி

விஜயவாடா, மே 24

விஜயவாடாவில் 4 இடங்களில ஏற்பட்ட தீவிபத்தினுல் 4 பேர் மாண்டனர் 150குடிசைகள்நாசமாயின. 25,000 பேர் வீடிழந்தனர்.


## தேசியப்பற்று உடையவராயிருங்கள்

**நாட்டின் பணத்தை சேமிக்கவும்—குடும்ப ஆரோக்கியத்தை விருத்தி செய்யவும்**

# குண்டசாலை அரிசியை

**சாப்பிடுங்கள்.**

* 100 வீதம் மண், கல் இல்லாதது.
* 100 வீதம் துர் நாற்றமற்றது.
* சத்துள்ளதும் போஷாக்கு மிகுந்ததும்.
* சுவையான அவித்த புளுங்கல் அரிசி.

**குண்டசாலை அரிசியை நீங்கள் வாங்கிச் சமைத்தால் 20 வீதம் கூடுதலான அளவை பெறுவீர்கள்.**

ஏனென்றுல் அது மூன்று மணித்தியாலம் மட்டும் அனலில் அவிய வைத்தது, குறுணி இல்லாதது.

இன்று குண்டசாலை அரிசியை ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். பின்னர் தினமும் அதையே வாங்குவீர்கள்.

**கொழும்பு விநியோகஸ்தர்:**

சிலோன் மிட்கன்றி ட்றேடிங் ஏஜென்ஸி

181, பழைய சோனக தெரு, கொழும்பு—12

தொலைபேசி: 4912

புறக்கோட்டை வியாபாரிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

**கண்டி விநியோகஸ்தர்:**

ஸ்ரீ முத்துமாரி ஸ்ரோர்ஸ், — கண்டி.

கண்டி சில்லறை வியாபாரிகளிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

**வர்த்தக சம்பந்தமான விசாரணைகள்:**

செரல் புறடக்ட்ஸ் உற்பத்தி ஆலை

குண்டசாலை, குருதேனியா.

தொலைபேசி: 808


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித்திட்டம்; அஸீஸ் கண்டனம்

## 'மலையக குழந்தைகளை புறக்கணியாதீர்'

கொழும்பு, செவ்

தேசிய கல்வித்திட்டத்தில் தோட்டப்பாடசாலைகள் ஒதுக்கப்பட்டுவிட்டதைக் கண்டித்தும் தோட்டப்பாடசாலைகள் அனைத்தையும் அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமெனக்கோரியும் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ்தலைவர் ஜனுப் ஏ. அஸீஸ் ஒரு அறிக்கை விடுத்துள்ளார்.

தோட்டப் பாடசாலைகளின் நிலைபற்றி விளக்கமாகக் குறிப்பிட்டுள்ள ஜனுப் அஸீஸ் மனித நீதிக்கும் முரணனவகையில் தோட்டப்பாடசாலைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதென்றும் இந்நாட்டிலுள்ள சகல சமூக மக்களையும் சரிசமமாகவும் சமநீதியுடனும் நடத்துவதாகக் கூறிக்கொள்ளும் தேசிய அரசாங்கம் தோட்டப் பகுதிக் குழந்தைகளின் கல்வியில் கவனம் செலுத்தத் தவறியது ஏமாற்றமளிப்பதாகவும் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தோட்டப் பாடசாலைகளை ஏற்றுக்கொள்ள மறுத்து தனியார் பாடசாலைகள் தொடர்ந்திருக்க அனுமதியளிப்பதென்ற முடிவை, தோட்டப் பகுதிமக்களுக்குப் பிரதிநிதித்துவமளிப்பதாகக் கூறிக்கொள்பவர்களும் ஏற்றுக்கொண்டிருப்பது பெருந் துரோகமென்றும், வசதி குறைந்த இப்பகுதி மக்களுக்குக் கல்வியுமளிக்காவிட்டால் அறிவற்றவர்களாகவே அவர்கள் இங்கிருந்து தாய்நாடுதிரும்ப வேண்டி நேருமென்றும் கூறுகிறார்.

## 'காணிகிடைத்தால் மேலும் ஒரு வீடமைப்புத் திட்டம்"

### யாழ்ப்பாணத்தில் வீடமைப்பு மந்திரி முகமத் வாக்குறுதி

யாழ்ப்பாணம், புதன்

"யாழ்ப்பாணத்தில் வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இன்று பாஷையூரிலும், கரையூரிலும் இரு வீடமைப்புத்திட்டங்களை ஆரம்பித்து வைக்கப்போகிறேன். வசதியான காணியொன்றை அரசாங்கத்திற்கு தந்தால் மற்றொரு வீடமைப்புத்திட்டத்தையும் விரைவில் இங்கு ஆரம்பித்துவைக்கமுடியும்"

நேற்றுக்காலை விசேஷ விமானமூலம் யாழ்ப்பாணக்திற்கு விஜயம் செய்த தொழில்வீடமைப்பு மந்திரி ஜனுப் எச். எம். முகமதி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி தொழிலாளர் மத்தியில் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

நேற்றுக்காலை 11-10 மணிக்கு மந்திரி விசேஷ விமானத்தில் பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தபொழுது யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா அவரை வரவேற்றார். மந்திரியுடன் யாழ்ப்பாண எம் பி திரு ஜி ஜி பொன்னம்பலம் வீடமைப்பு இலாகா கமிஷனர் திரு. செல்டன் பெர்ணாண்டோ, கட்டட நிபுணர் ஆகியோரும் அதே விமானத்தில் வந்தனர்.

விமான நிலையத்திலிருந்து மந்திரி மோட்டார் ஊர்வலமாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியிலுள்ள சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கனகடன் நிவர்த்திச் சங்கக் காரியாலயத்திற்கு அழைத்துவரப்பட்டார். சங்கத்தில் நீண்டநாள் அங்கத்தவராக இருந்து ஓய்வுபெற்ற குருநாதர் என்பவருக்கு 1242 ரூபாய்க்கான காசோலையை மந்திரிகையளித்தார். மற்றொரு அங்கத்தவரான எஸ். சந்தியாபிள்ளைக்கு 1271 ரூபாய்க்கான காசோலையை யாழ்ப்பாண எம். பி. கையளித்தார்.

### சுகாதாரஊழியர் கோரிக்கை

சுகாதார சேவையாளருக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு வீடமைப்பு திட்டத்தை ஆரம்பிக்கவேண்டுமென்றும், தொழிலாளர்களுக்கு ஓய்வுகால விடுதியொன்றையும் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கவேண்டுமென்றும், மந்திரியை சங்கத்தின் சார்பில் கேட்டுக்கொண்டனர்.

தேசிய சேவை சுகாதார சேவையாளர் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் தொழிலாளர் பிரச்சினையை தீர்த்துவைக்கும்படியும், யாழ்ப்பாணத்தில் தொழிற்சங்க போதனு வகுப்புகளை நடத்தஒழுங்குசெய்யவேண்டுமென்றும். தொழிலாளர்களின் வீட்டுப் பிரச்சினையையும் தீர்க்கவேண்டுமென்றும் மந்திரியை கேட்டுக்கொண்டனர்

பத்துவருடகாலமாக தொழிலாளர்களின் பலபிரச்சினைகள் தீர்த்துவைக்கப்பட்டபோதிலும், வீட்டுப்பிரச்சினை தீர்த்துவைக்கப்படவில்லையென மந்திரியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது,

தேசிய வீடமைப்பு இலாகாகடன்தந்துசில்லரை ஊழியர்களுக்கு உதவவேண்டுமென்றும், இதுவரை இச்சங்கம் 3 லட்சம் ரூபாவரை சில்லரை ஊழியர்களுக்கு கடன்கொடுத்திருக்கிறதென்றும், தொழிலாளர்கள் மந்திரிகளைக்கண்டு தங்கள் குறைகளை எடுத்துக்கூறுதபடி சில உத்தியோகத்தர்கள் இடையில் தடையாக இருப்பதாகவும், திரு எஸ். அருமைநாயகம் பேசும் போதுகூறினார்.

மந்திரி ஜனுப் மகமத் தமிழில் பேசும் போது கூறியதாவது:

தொழிலாளர்களின் குறைகளைத்தீர்ப்பதுதான் எனது நோக்கம். மந்திரிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் தடையாக இருக்கும் அதிகாரிகளை, அவர்கள் எந்த இலாகாவைச் சேர்ந்தவர்களாகயிருப்பினும், நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும். குறைகளை எடுத்துக்கூற தொழிலாளர்களுக்கு உரிமை உண்டு. ஒரு சங்கம் அரசியல் சம்பந்தப்பட்ட விஷயங்களில் தலையிட்டால் அது தொழிற்சங்கமாகாது. தொழிலாளர்களின் குறைகளைக்கூற ஒருகமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது. கமிஷன் முன் உங்கள் குறைகளைக்கூறலாம். கமிஷன் அறிக்கை கிடைத்தபின், தொழிலாளர் நன்மை கருதி சட்டங்களை மாற்றியமைப்பதுபற்றி நடவடிக்கை எடுப்பேன்.

### அரசாங்கத்தில் நம்பிக்கைவைக்கவும்

தொழிலாளர் தேசிய அரசாங்கத்தில்நம்பிக்கை வைக்கவேண்டும். தொழிலாளர்களுக்கு விரோதமாக இந்த அரசாங்கம் என்றும் நடக்காது. தொழிலாளர் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தால் தான் குறைகளை விரைவில் தீர்க்கலாம்.

சாதிமதபேதமின்றி எல்லாமக்களுக்கும் சமமாக சேவை செய்வதுதான் தேசிய அரசாங்கத்தின் கொள்கை.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பேசும்போது, வசதியான காணியொன்றைத்தந்தால், மூன்றாவது வீடமைப்புத் திட்டமொன்றை தொழில்மந்திரி மூலம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்க என்னாலான முயற்சிகளை எடுப்பேன் என்று கூறினார்.

## சேக்கிழார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு துறைகளில் நின்றவர்கள்; நிற்கும் போது வீடுபெற நின்றவர்கள். ஒன்பதின்மர் தொகையடியார்களும் அவ்வாறே வெவ்வேறு துறைகளில் வீடுபெற நின்றவர்கள்

தனியடியார்களுந் தொகையடியார்களுமாகிய எழுபத்திரண்டு வகையினர்களின் திருநாமங்களையும் எடுத்தோதித் திருத்தொண்டத் தொகை செய்தருளினார் சுந்தரமூர்த்திநாயனர். அவற்றை வழிமொழிந்து சற்றே வகைப்படுத்தித் துதித் தருளினார் நம்பியாண்டார்நம்பி

72 வகையினர்களும் தத்தமக்கமைந்த துறைகளில் வீ பெற நின்றஅரும்பெற்ற சரித்திரத்தை நம்பிஞேரும் உயர்ந்து கடைத்தேறும் பொருட்டுவிரித்துப் பெரிய புராணம் செய்த மகான் சேக்கிழார் பெருமான்.

நமக்குத் தமிழிற் கிடைத்த வேதம் திருக்குறள் சிவாகமம் பெரியபுராணம்.

பெரிய புராணம் தந்தருளிய சேக்கிழார் பெருமானைச் சமய குரவர்கள் வரிசையில் வைத்துத் துதிப்பது-வழிபடுவது ஆன்றோர் ஆசாரமாம்.

உலோகாயதம் பரவுகின்ற இந்தக் காலத்திலே சேக்கிழார் பெருமானின் பெருமையை அறிவுறுத்தும் பொருட்டு ஒரு மன்றம் தோன்றி விழா எடுப்பது நமது நாடு செய்த தவப்பயனேயாம்.

இறைவன் திருவருளால் சேக்கிழார் மன்றமும் அதெடுக்கும் விழாவும் பயன் செய்து நீடு வாழ்க வாழ்க.

## நஞ்சுக்கு 7 பேர் மரணம்

ஹைதராபாத், மே 24

சிட்டூர் ஜில்லாவிலுள்ள முகம்மது இமாம் என்ற மனைவியற்ற ஒருவர் தான் நஞ்சுஅருந்தியதுடன், தனது 6 குழந்தைகளுக்கும் நஞ்சூட்டினார். ஏழு பேரும் மாண்டனர்.

## இரு மருந்துச்சாலைகள் எம். பி. திறந்துவைப்பார்

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சித்தொகுதியில் இருபுதிய மருந்துச்சாலைகள் திறக்கப்படவிருக்கின்றன.

இன்று திரணதீவு மருந்துச்சாலை இறக்கப்படும். இம்மாதம் 29-ம் திகதி அக்கராயன்குளம் மருந்துச்சாலை திறக்கப்படவிருக்கிறது. உத்தியோகபூர்வமாக இவ் மருந் [illegible] பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ இரத்தினத்தினால் திறந்துவைக்கப்படும் [illegible]பகுதி சுகாதார அதிகாரியும் இதில் கலந்துகொள்வாரெனத் தெரியவருகிறது

## சேக்கிழார் விழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் ஆதரவில் இன்று காலை யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில்ஆரம்மாகும், சேக்கிழார் விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:-

முற்பகல்: சேக்கிழார் குருபூசை, 9-00—9-10 பூசை, 9-10—9-20 தேவாரம்-சங்கீதபூஷணம் வே. கனகசுந்தரம், 9-20—9-40 திருமுறை ஓதல்: யாழ். இந்து மகளிர் மாணவியர். 9-40—10-20 அளவை இசைக்கலை மன்ற மாணவியர், 10-20—10-40 யாழ் இந்துக்கல்லூரி மாணவர். 10-40—11-00 கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர், 11-00—11-20 சொற்பொழிவு: திரு. மு. ஞானப்பிரகாசம், 11-20—11-50 புராணபடனம், 11-50—12-20 பூசை, தேவாராம், பிரசாதம் வழங்கல்.

நண்பகல் 12-00 கல்லூரி விடுதிச்சாலையில் மாகேசுர பூசை, பிற்பகல்: ஊர்வலமும் விழாவும்,

பி. ப. 5-00—6-00 ஊர்வலம்: வண்ணை சிவன்கோவிலிலிருந்து விழா மண்டபம் வரை,

### சேக்கிழார் விழா

தலைவர்: மன்றத்தலைவர் திரு ம. ஸ்ரீகாந்தா, 6-00—6-05தேவாரம், 6-05—6-40 வரவேற்புரை, தலைமையுரை, செயலாளர்அறிக்கை 6-40—8-00 கருத்தரங்கு தலைவர்: வித்துவான் க. கார்த்திகேசு, 1. சேக்கிழாரும் சமயமும்: வித்துவான் பொன் முத்துக்குமாரன், 2 சேக்கிழாரும் கவிநயமும் பண்டித, வித்துவான், வி சீ கந்தையா, 3 சேக்கிழாரும் அரசியலும்: திரு க சிவராமலிங்கம், 4 சேக்கிழாரும் காவியமும் வித்துவான், பண்டிதர், சைவப்புலவர் க வேந்தனர், 5 சேக்கிழாரும் பெண்களும் பண்டிதை சைவப்புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி, 8-00 சிறப்புச் சொற்பொழிவு 'சேக்கிழார் வளர்த்த செந்தமிழ்' பேராசிரியர் வித்துவான் க வெள்ளைவாரணனர் அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ய்ச்சித்துறைத் துணைப்பேராசிரியர், தேவாரம்

## தேசீய . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

திய வெளிநாட்டு விஜயம் பற்றி குறிப்பிட்டு வெளிநாடுகளிலிருந்து நிறைய பொருளாதார உதவி கிடைக்கவிருக்கிறது என்றார்; நாட்டின் பொருளாதார நெருக்கடி விரைவில் தீர்ந்துவிடும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

அரசாங்கத்தின் சாதனைகள் பற்றியே கட்சியின் பிரசாரம் அமைய வேண்டும் என்றும்இதுஎதிர்கட்சியினர் பிரசாரத் தந்திரத்தை முறியடிப்பதாக இருக்க வேண்டும் என்றும் குழு முடிவு செய்தது. ஒவ்வொரு அமைச்சினதும் சாதனைகளை சிறு பிரசுரங்கள் மூலம் மக்களுக்கு அறிவிக்கவும் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

## ரஷ்ய உதவி வேண்டாமே

சீன-அமெரிக்கா போர் மூண்டால், தாம் ரஷ்ய உதவியை எதிர்பார்க்கவில்லை என வெளி மந்திரி சென்யீ கூறினார்.

## இசைக் கலைஞர் மரணம்

பம்பாய், மே 24

பிரபல இசைக்கலைஞர் நாஸார் மொஹிதீன் இன்று பம்பாயில் காலமானார். அவரு கு வயது 47. மூன்று ஆண்டுகளுக்கு முன் இவர் ஐரோப்பிய சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டிருந்தார்.

## சர்வதேச . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று வெளிநாட்டு ஸ்தாபானமொன்று ஏமாற்றப்பட்டுவிட்டதாகவும் இதுசம்பந்தமாக சில அரசியல்வாதிகளுக்கு 35 ஆயிரம் பவுனுக்கு செக்கொடுக்கப்பட்டதாகவும் இதுசம்பந்தமாகவே சர்வதேச துப்பறியும் நிபுணர்களின் புலன் விசாரணைகள் நடைபெறுவதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன, ஏமாற்றப்பட்ட வெளிநாட்டு ஸ்தாபனம் தான் இந்த துப்பறியும் ஸ்தாபனத்தின் உதவியைக் கோரியுள்ளது என்று தெரிகின்றது.

## 50 சேலைக்குமேல் இருந்ததாம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் கடந்த ஒரு வார காலமாக நடைபெற்றுவந்த திருட்டுச் சம்பவங்கள் சம்பந்தமாக நேற்று முன்தினமிரவு கைது செய்யப்பட்ட ஒருவரிடம் ஐம்பதுக்கு மேற்பட்ட விலை உயர்ந்த சேலைகள் இருந்ததாகத் தெரியவந்துள்ளது

இந்தச் சேலைகளில் பலவற்றை இந்த நபர் வீடுகளின் யன்னல்களுக்கூடாக எடுத்ததாகக் கூறப்படுகிறது.

திருடப்பட்ட இச்சேலைகளின் சொந்தக்காரர்கள் யார் எனக் கண்டுபிடிப்பதில் இப்போது யாழ்ப்பாணம் பொலிசார் தீவிராமாக ஈடுபட்டுள்ளனர். சிலருக்கு தமது சேலைகள் களவு போனது பொலிசார் தெரிவித்த பின்னரே தெரியவந்ததாம்.

சமீபத்திய திருட்டுக்கள் சம்பந்தமாக யாழ்ப்பாணம் பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர்.

## ஆங்கில . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னத்தின் 29-வது ஷரத்தை யே இது முறியடிப்பதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளன

சிங்களம் பாடசாலைகளில் போதனு மொழியாக்கப்பட்ட காலத்திலிருந்தே ஆங்கிலமும்சிலசிறுபான்மை மக்களின் போதனுமொழியாக அங்கீகரிக்கப்பட்டுவந்துள்ளது. அந்த உரிமையை பறிக்கவேண்டாமென்று இந்த ஸ்தாபனங்கள் கேட்டுள்ளன மகஜர் சமர்ப்பித்துள்ளஸ்தாபனங்களின் பெயர்கள் சிலவருமாறு:

டச்சு-பறங்கியர் சங்கம் இலங்கைச்சோனகர் சங்கம் இலங்கை மலாயர் சங்கம், இலங்கை பூராஸ் சங்கம், இலங்கை மெமொம் சங்கம், இலங்லக பாகிஸ்தானியர் சங்கம், கொழும்பு செட்டிமார் சங்கம், போத்துக்கேயர் பறங்கியர் சங்கம், இல குஜராத்தி சங்கம், இந்தோ-சிலோன் சங்கம்.

## நன்றி அறிவித்தல்

எமது மகன் புவிராஜாவின்அகாலமரணச்சடங்கில் நேரில் கலந்துகொண்டவர்களுக்கும், தபால், தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றியைத் துக்கத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திரு. திருமதி பிலிப்ஸ், ஆயுர்வேதவைத்தியர், ஆரோக்கிய வாசம், மட்டுவில் வடக்கு. 330

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 65-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 25ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org